368

368
2-52

கடல் மறவர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAY 1952
MADRAS

# விருந்து

வரிசை

10

பதிப்பாசிரியர் :
கா. அப்பாத்துரை. M.A., L.T.

# நூல்

விக்டர் ஹியூகோ கெர்ஸ்னித் தீவில் இருக்கும்போது எழுதிய புனைகதையே கடல் மறவர். நூலின் பின்னணி கெர்ஸ்னித் தீவிலுள்ள மக்கள் வாழ்வும் கடல், பாறை, புயல் ஆகியவற்றின் கொந்தளிப்புமேயாகும். இவற்றிடையே வீரம், தியாகம் ஆகியவற்றின் உருவான கதைத் தலைவனின் போராட்டமும் வெற்றியும் அவன் காதல் வாழ்வில் தோல்வியாக முடியும். அதன் முடிவும் நம் உள்ளத்தில் பெருமித வியப்பையும் அவல உணர்ச்சியையும் தூண்டுகின்றன. பல கடல் மறவருள் தலைசிறந்த, ஆனால் முரண்பட்ட சமூகச் சூழலில் சிக்கிய, கடல் மறவனாகிய அவ்வீரன் நம் உள்ளத்திரையை நிரப்புகிறான்.

கிட்டத்தட்ட மனித உணர்ச்சியும் அதேசமயம் மனித எல்லைகடந்த அகண்ட ஆற்றலும் உடையவையாய்ப் பாறைகளும் கடலும் புயலும், இந்நூலில் சித்தரிக்கப்படுகின்றன. அறிவு, விடாப்பிடி, திட்டம் ஆகியவற்றின் துணையால் அவ்வியற்கையின் ஆற்றல் மனிதனின் சிறுமுயற்சி, ஆற்றலைக்கூட வெல்லுகிறது. இப்போராட்டம் கடலின் ஒரு வீர காவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

கெர்ஸ்னி மக்களின் நம்பிக்கைகள், வாழ்க்கைப் பண்புகள் திறம்படத் தீட்டிக்காட்டப்படுகின்றன. கடலகத்தில் அது பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடைப்பட்ட தீவாயிருப்பது போலவே, வரலாற்றிலும் அது 19-ம் நூற்றாண்டுப் பரப்பிலுள்ள ஒரு 12-ம் நூற்றாண்டு பிரிட்டன்–பிரான்சு ஆகியவற்றின் பண்பாட்டுக் கலவைத் தீவாகக் காட்சி தருகிறது.

பண்போவியங்கள் மிகச் சில. அவையும் ஒரு தனித் துறைப்பட்டவை ஆயினும் அவர்களுக்குள் காணப்பெறும் சிறு நுட்ப வேறுபாடுகள் கதைப்போக்கிற்குச் சுவை தருகின்றன.

விருந்து இலக்கிய வரிசை

10

விக்டர் ஹியூகோவின் பிரஞ்சு நாவல்

# கடல் மறவர்

பதிப்பாசிரியர் :

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை எம். ஏ. எல். டி.,

**விருந்து எண் 10 : கடல் மறவர்**
வெளியீடு : 1952 மே, 15
பதிப்புரிமை

## விலை 8 அணா

தொடர்ந்துவரும் 12 புத்தகங்கட்குத் தபாற்செலவு உட்பட ரூ. 6—0—0

★

---

இவ்வரிசையில் முன் வெளிவந்தவை

1. இந்துலேகா—*மலையாள நாவல்*
2. மாமனார் வீடு—*ஆங்கில நாடகம்*
3. துன்பக்கேணி
—*ஜப்பானியக்கதை*
4. நூர்ஜஹான்—*வங்காளி நாடகம்*
5. கைக்கடிகாரம்
—*ரஷ்யக் கதைகள்*
6. முத்துமாலை
—*சீனக் கதைகளும் நாடகமும்*
7. தாயகத்தின் அழைப்பு
— *ஆங்கில நாவல்*
8. அறக்கோட்டம்
— *இந்தி நாவல்*
9. மாலதி—மாதவன்
—*சமஸ்கிருத நாடகம்*

---

★

வெளியிடுவோர் :
**பொன்னி லிமிடெட்**
16, செனியம்மன் கோயில் தெரு,
தண்டையார்ப்பேட்டை
சென்னை—21

# கடல் மறவர்

## பனிமீது படிந்த பாவையின் பரிசு

**பா**ல் குழம்பில் குளித்ததுபோல, நிலவுலகெங்கும் வெண் பனியாடை போர்த்திருந்தது. பழைய ஆண்டு துயின்றது. புதிய ஆண்டு இன்னும் பிறக்கவில்லை. அன்று கிரிஸ்துமஸ் விழா நாள்!

கடிகாரத்தின்படி காலை ஏறிவிட்டது. ஆனால் குளிர் காலமாதலால் கதிரவனொளி இன்னும் பரவவில்லை. வெண்கரடி போலவும் வெள்ளானை போலவும் வெள்ளை யான பிறவிலங்கு வடிவங்கள் போலவும் காட்சியளித்த கட்டடங்களிடையே தெருக்கள் ஆளன்ற பனிக்காட்டுப் பாதைபோல வெறிச்சென்றிருந்தன. யாரும் நடமாட வில்லை.

முன் ஒன்றும் பின் ஒன்றுமாக இரண்டு உருவங்கள் மட்டும் நகர்ந்து சென்றுகொண்டிருந்தன. ஒன்றன் நடை பனியிடையே பனியாக மிதந்து சென்றது. அது ஒரு பெண். பின்னால் எட்டி நடந்தது ஒரு ஆண் உருவம். இருவரும் தொடர்பற்ற யாரோ இருவர் போலத்தான் சென்றனர். ஆனால் பெண் அடிக்கடி குனிந்து நிலத்தில் ஏதோ கையால் கீறிக்கொண்டே சென்றாள். ஆடவன் அதில் கருத்துச் செலுத்தவில்லை. அவள் யார் என்றும் கவனிக்கவில்லை.

தற்செயலாக அவன் பார்வை நிலத்தில் ஒருதடவை படிந்தது. அவன் முகம் வியப்புக் குறி காட்டிற்று. இல்லியட்! ஆம். 'இ-ல்-லி-ய-ட்!' அது தன் பெயர்தான். அப்பெண் யார்? அவள் ஏன் தன் பெயரை எழுதவேண்டும்? அதுவும் பனியில்!

அவன் விரைந்து முன் சென்றான், அவள் யாரென்று பார்க்க!

அவள் சட்டென ஓடி எங்கோ மறைந்தாள்.

அவள் டெரூசெட்தான் என்று அவன் ஊகித்தான்.

அவன் இளைஞன்தான். ஆனால் பெண்கள் பக்கம் அவன் உள்ளம் என்றும் சென்றதில்லை. அவன் அறிந்த பெண்ணினத்தவள் அவன் அன்னை ஒருத்திதான். அவளைக் கூட அவன் மறந்து நெடுநாளாயிற்று. அவன் தனிவாழ்வு வாழ்ந்தான். ஆடவர்கூட அவன் பக்கம் நாடியதில்லை. ஆடவர், பெண்டிர் எவரையும் அவனும் இதுவரை சட்டை செய்ததில்லை.

அவன் நிலத்தில் உருண்டு புரண்ட ஒரு நல்விலங்கு. அவள் வானத்தில் பறந்து திரிந்த ஓர் இசைப்பறவை. அவன் எல்லாருக்கும் பயன்படத்தக்க, ஆனால் எவர் உள்ளத்தையும் ஈர்க்காத எஃகு உருளை. அவள் கண்ணைக் கவரும் பத்தரைமாற்றுப் பசும்பொன். அவள் எங்கே, அவன் எங்கே?

ஆனால் அவளை அவன் அடிக்கடி கண்டிருக்கிறான். அவளைக் காண்பதிலேயே—தொலைவிலிருந்து கவனிப்பதிலேயே—அவன் இதுவரை உள்ளத்தில் அமைதியான மகிழ்ச்சி கொண்டிருந்தான். அவள் தன்னைப் பொருட்படுத்தினாள்—தன் பெயர் அறிந்திருக்கிறாள்—பெண்மையின் இளமைப் பருவத்துக்குரிய குறும்பிடையே தன் உள்ளக் குறிப்பை வெளியிட்டுக் காட்டியிருக்கிறாள்! இவ்வெண்ணங்கள் வழக்கமான அவன் வரண்ட உள்ளத்தைக் கனிவுபடுத்தின. அவன் உள்ளத்தில் அவள் செயல் அவனையறியாமல் ஆழ்ந்து பதிந்தது.

கில்லியட், ஸென்ட் ஸாம்ப்ஸன் ஊர் வட்டத்திலேயே வாழ்ந்தான். கொர்ஸ்னித் தீவு முழுவதும், ஆங்கிலக் கடற்கால்வாயிலுள்ள கடற்கால்வாய்த் தீவுகளெங்குமே, அவன் நன்ருக அலைந்து திரிந்து பழகியிருந்தான். ஆனல் கடலும் பாறையும் அவனுடன் பழகினவே தவிர, மக்கள் நன்கு பழகவில்லை. அவன் இருந்த வீடும் அவன் குடும்ப மரபும் இதற்குப் பெரிதும் காரணமாயிருந்தன. அவன் சிறு பிள்ளையாயிருக்கும்போது அவன் தாய் அவ்வூருக்கு வந்தாள். அவன் தந்தை யார் என்பது அவனுக்குத் தெரியாது. மாது கில்லியட்டிடம் நிறையப் பணம் இருந்தது. சிறு நிலப்பண்ணைகள் இரண்டை அவள் வாங்கினள். அவள் கைத்திறத்தால் அவை வளமாயின. தவிர, ஸென்ட் ஸாம்ப்ஸன் துறைமுகத்தை அடுத்திருந்த 'பூதேலா ரூ' என்ற வீட்டையும் அவள் வாங்கினள். அது கிட்டத்தட்ட நூறு நூற்றிருபது வெள்ளிக்கே அவளுக்குக் கிடைத்தது. ஏனென்ருல் அது பேய் குடியிருந்த வீடு என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அத்தகைய வீட்டில் அவள் பிள்ளையுடன் அச்சமின்றிக் குடியிருந்தாள். பேய் அவளை ஒன்றும் செய்யவில்லை. அதனல் அவளும் ஒரு பேயாயிருக்கவேண்டுமென்று கொர்ஸ்னி மக்கள் தீர்மானித்தனர்!

தாய் இறந்தபின் பிள்ளை தாய்மரபு கெடாமல் தனி வாழ்க்கை வாழ்ந்தது. பேயுறவு அவனையும் விடவில்லை. ஒரே ஒருதடவை சமயகுரு அவன் வீட்டில் சென்றிருந்தார். அவன் அறையில் வால்ட்டேர் எழுதிய நூல் ஒன்று இருந்தது. பேய்க்கும் கத்தோலிக்க சமயத்துக்கும் தொடர்பு உண்டு என்று கடற்கால் தீவுகளிலுள்ள மக்கள் கருதியிருந்தனர். ஆனல் வால்ட்டேரோ கத்தோலிக்கரால் கூடப் பேயுடன் நேரடி உறவுடையவர் என்று கருதப்பட்டார். அத்துடன் கடற்பாசி வகைகள்பற்றிய ஒரு நூலும், மருந்துச் சரக்குகள், கனிப்பொருள்கள் அடங்கிய கலங்களும் அவனிடம் இருந்தன. கந்தகப் புகையும், பல

வகை ஆவிகளும் அவன் அறையில் அடிக்கடி நடமாடின. பேயின் தொடர்புடைய சூனியக்காரரின் சின்னங்களாக இவை கருதப்பட்டன.

சூனியம் வைப்பதும், அதை அகற்றுவதும் பேயின் உதவிபெற்ற செயல்கள் என்று நாட்டுப்புற மக்கள் எண்ணினர். முன்னது நம்பிக்கை அடிப்படையானது! பின்னது சோதித்துப் பார்க்கத்தக்கது. கில்லியட்டின் சூனியத்தாலேயே தன் வீட்டுக் கிணற்றிலுள்ள தண்ணீர் கெட்டு வருவதாக ஒரு பெண் கருதினாள். அவனை இட்டுச் சென்று அவள் அதைக் காட்டினாள். அவன் சில கேள்விகள் கேட்டான்.

"கிணற்றருகே சாக்கடை செல்கிறதா?"

"ஆம்"

"அதை வேறுபுறம் வெட்டிவிட்டாலென்ன?"

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. "சாக்கடையின் போக்குக்கும் கிணற்றுத் தண்ணீருக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? தொடர்பு இருந்தாலும் ஒரு பேயின் ஆற்றல் உதவிசெய்தாலல்லாமல் அதை எப்படி காண முடியும்" என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டாள். கில்லியட் மறுமொழி கூறவில்லை. தானே சென்று அதை வெட்டித் திருப்பினான். தண்ணீர் இரண்டு நாளில் செம்மைப்பட்டது.

"மாயத்தால்தானே அவன் கிணற்று நீரை மாற்றினான்; மாயத்தாலேயே அவன் அதைக் கெடுத்திருக்க வேண்டும்" என்பது இதன் மூலம் அவளுக்குத் தெளிவாயிற்று.

பெண்களை விரும்பாதிருப்பதும், திருமணம் செய்யாதிருப்பதும் பேய்ச் சூனியக்காரர்களுக்குரிய இலக்கணங்களுள் சில. இதையும் ஒருபெண் தேர்ந்து பார்த்துவிட்டாள் "அயலில் குடியிருக்கும் அன்பரே! நீர் ஏன் திருமணம் செய்துகொள்ளவில்லை? என்றைக்குத்தான் ஒரு மனைவியைக் கட்டிக்கொள்ளப் போகிறீர்?" என்று அவள் கடிதம்

எழுதினாள். இதற்கு அவன் "கடற்கரைக் குத்துக்கல் என்றைக்குக் கணவனை அடையும், அன்றே நானும் ஒரு மனைவியை மணப்பது உறுதி" என்று மறுமொழி எழுதி யனுப்பினான்.

கடற்கரைக் குத்துக்கல் ஒரு பெண் பேய் வாழும் இடம். அதனருகே பல விலங்குகளின் ஒலிகள் கேட்கும்: விலங்குகள் அருகில் இருக்கமாட்டா.

கில்லியட்டிடம் எல்லாருக்கும் அச்சம். ஆனால் அதே சமயம் அவன் தொட்டால், பலநோய்கள் நீங்கும் என்று அவர்கள் நம்பினர். அவன் தொட மறுத்தான். மருந்து கொடுத்தே நோய்களைக் குணப்படுத்தினான். இதனால் அவனை ஆட்கொண்ட பேய் நல்லபேயல்ல என்று மக்கள் உணர்ந்துகொண்டனர்!

அவன் குடிப்பதில்லை; புகைப்பதில்லை; புகையிலை கூடத்தொடுவதில்லை. இதுவும் சூனியத்தின் அடையாள மாகவே கொள்ளப்பட்டது. ஏனென்றால் அவன் கோயி லுக்குப் போவதில்லை!

பறவைகளிடமும் விலங்குகளிடமும் அவன் மிகவும் அன்பாயிருந்தான். ஆனால் இதுவும் பேய்களின் கட்டளைப் படிதான் இருக்கவேண்டும் என்று கருதப்பட்டது. ஏனென்றால் அவன் மீன்களிடம் கருணைகாட்டுவதில்லை. மீன்பிடிப்பதை ஒரு பொழுது போக்காகக் கொண்டிருந் தான்.

## டெரூசெட்

டெரூசெட், லெத்தியெரி என்ற கப்பலோட்டியின் ஒரே வளர்ப்புப் புதல்வி. அவளுக்குத் தாயும் தந்தையும் இளமையிலேயே இறந்துவிட்டார்கள். சிற்றப்பனை

லெத்தியரி அவளைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வந்தான்.

லெத்தியரி பத்து வயதிலிருந்தே கப்பலில் குற்றேவற் பையன் நிலையிலிருந்து படிப்படியாக எல்லாப் பணித்தரங்களிலும் வேலை பார்த்து உயர்வடைந்து, இறுதியில் மீகாமனானவன். ஐம்பதாண்டு கடும்பணியாற்றி வெற்றி பெற்றபின், அவன் ஸெண்ட் ஸாம்ப்ஸனில் பிராவே என்ற பெயருடைய தன் இல்லத்தில் வந்து தங்கினான். கில்லியட்டின் இல்லமான பூ தேலா ரூவும் லெத்தியரியின் இல்லமான பிராவேயும் கடலில் உந்தி நிற்கும் ஒரு நிலமூக்கின் இரு கரையிலும் ஒன்றை ஒன்று அடுத்து இருந்தன.

லெத்தியரி என்றும் மணம் செய்யாமலே இருந்துவிட்டான். அத்துடன் அறுபது வயதில்கூட அவன் இளமையின் முறுக்கும் சுறுசுறுப்பும் கனவார்வங்களும் மாறாமலே இருந்தான். கப்பலோட்டியாயிருக்கும்போது அவன் வாழ்ந்த எளிய உழைப்புவாழ்க்கையை அவன் விடவில்லை. ஆனால் இப்போது அவன் பேரளவு பணம் சேர்த்து வைத்திருந்ததனால், அவ்வுழைப்பை வேறு வகையில் திருப்பினான். பணத்தை முதலிட்டுக் கப்பற் கழகம் நடத்துவதில் அவன் கருத்துச் செலுத்தத் திட்டமிட்டிருந்தான்.

கிலியட்டைப் போலவே லெத்தியரியும் சற்றுப் பண்படாத உள்ளமுடையவன். அன்பும் தன் மறுப்பும் பண்பட்ட உள்ளங்களைவிட இருவரிடமும் மிகுதி. கெர்ஸினித் தீவைச் சுற்றிலும் ஸெண்ட் ஸாம்ப்ஸன், ஸெண்ட் பீட்டர்ஸ் போன்ற பல துறைமுகங்கள் இருந்தன. அதுபோலவே கப்பல்களுக்குக் காலனை கொடும்பாறைகளும் பல இருந்தன. நாள் தவறினாலும் வாரந்தவறாமல் அக்கடற்கரையருகே படகுகளும் கப்பல்களும், கடற்பாறைகளுக்கும் புயலுக்கும் இரையாகத் தவறுவதில்லை. இவ் அழிவுகளையெல்லாம் கவனித்து அப்பக்கங்களில் கடலோடிகளுக்குத் தோன்றாத் துணையாக லெத்தியரி இருந்து வந்தான். அவனால் உயிர் அளிக்கப்பெற்றுக் காப்பாற்றப்பட்டவர் பலர்.

லெத்தியரியின் ஆதரவுபெற்ற இளைஞருள் ராங்தேன் ஒருவன். பாரிஸிலிருந்த அவன் தாயும் தந்தையும் பல தீய தொழில்களில் ஈடுபட்டு அதன் காரணமாக மீளாக் கடுஞ் சிறைப்பட்டனர். சிறுவன் ராங்தேன் பாரிஸ் தெருக்களில் அலைந்துகொண்டிருந்தான். லெத்தியரியின் கடற்பயணங் களின்போது, அவன் அச்சிறுவனைக் கண்டு இரங்கி, அவ னைத் தன்னுடன் கொண்டுவந்தான். அவன் உடல் வலி மையும் அறிவுக்கூர்மையும் உடையவன். அவனிடம் லெத்தி யரியின் பாசம் வளர்ந்தது. அவனை லெத்தியரி தன் கப்பற்றொழிலில் அமர்த்திப் படிப் படியாக உயர்த்திப் பங்காளி ஆக்கியிருந்தான். ராங்தேனும் நாள்தோறும் உழைத்து ஈட்டி அதில் சிறிது பணம் போட்டிருந்தான். ஆனால் திடுமென ஒருநாள் ராங்தேனைக் காணவில்லை. லெத்தியரியின் பணத்திலும் நாற்பதினாயிரம் வெள்ளி அவனுடன் மறைந்தன. லெத்தியரியின் செல்வ நிலைக்கு இது ஒரு பேரிடியாயிற்று.

தளரா உள்ளமுடைய லெத்தியரி இதிலிருந்து தன் மதிப்பை மீட்கப் புதிய திட்டங்களிட்டாள்.

அது பாய்க்கப்பல்களின் காலம். நீராவிப் படகுகள் அப்போதுதான் உலகில் தோன்றியிருந்தன. கப்பல், படகுத் தொழிலில் ஈடுபட்டவர் யாவரும் புதியகப்பலை எதிர்த்தனர். சமயவாதிகள் தீயும் நீரும் கலந்த இந்நீராவிச் சக்தியை கடவுளுக்குப் பகைவனான பேய்மகன் ஆற்றல் என்று தூற்றினர். அதுமட்டுமன்று. அந்நாளைய அறி வியற் கழகங்கள் கூட இப் புதுமுறையைக் கண்டித்தன. கெர்ஸ்னியிலோ பழமையின் பிடி மக்களை இன்னும் மும் மடங்காகப் பிணித்திருந்தது. ஆயினும் லெத்தியரி துணிந்து புதிய நீராவி இயந்திரம் ஒன்று தருவித்தான். அதைச் செய்ய லெத்தியரியே திட்டம் தந்தான். ஃவிரஞ்சுப் பொறியாளன் ஒருவன் அதைச் செய்து கொடுத்தான். லெத்தியரியே நேரில் இருந்து கப்பல் கட்டினான்.

பழமைப் புயலையும் புதிய கடற்புயலையும் ஒருங்கே சட்டை பண்ணாது எதிர்த்து வாரந்தோறும் ஸெண்ட் ஸாம்ப்ஸனிலிருந்து ஃவிரஞ்சுக்கடற்கரையிலுள்ள ஸெண்ட் மலோத் துறைக்கு நீராவிக்கப்பல் வாணிகச் சரக்குகளும் ஆட்களும் ஏற்றிச் சென்றது. விரைவில் கப்பல் கழகம் வளர்ந்தது. எதிர்ப்புக்களும் பழைய சப்பல் தொழில்களின் எதிர்ப்பளவில் குறைந்தன. ராங்தேன் கொண்டு சென்ற பணம், புதிய முயற்சிக்கு வாங்கிய கடன் ஆகிய இரண்டுமே ஆதாயங்களால் அடைபட்டன. ஆண்டுக்கு ஆயிரம் பொன்னுக்குக் குறையாமல் லெத்தியரிக்குக் கிட்டிற்று. அவன் பெயரும் வெறும் லெத்தியரி என்ற நிலையிலிருந்து திரு. லெத்தியரி ஆக உயர்ந்தது. 'உயர் திரு' ஆகவும் தொடங்கியது. திருத்தகு, பெருமகனார், கோமகனார் ஆகிய படிகளும் வருங்காலத்தின் கருவில் காத்திருந்தன என்று பலர் கூறத்தொடங்கினர்.

புதிய கப்பலுக்கும் தன் வளர்ப்புப் புதல்விக்கும் லெத்தியரி ஒரே தெய்வ குரவரின் இரு பெயர்களை வைத்தான். டெரூசெட் என்பதன் மறுபெயரான டியூராண்டு கப்பலின் பெயராயிற்று. டெரூசெட் தனக்கு ஒரு புதல்வியானால், டியூராண்டு தனக்கு இன்னொரு புதல்வியென்று அவன் கருதினான். அவன் உயிர் கப்பல்மகவின் மீதும் பெண்மகவின் மீதும் ஒரு படியாகப் படர்ந்திருந்தது.

கப்பல்மகவுக்குக் கணவனாகத் திரு. குளூபின் அமர்த்தப்பட்டான். ராங்தேன் தெறுதலைத் தனத்தை முன் கூட்டி அறிந்து அவன் எச்சரித்திருந்தான். ராங்தேனைப் போலவே அவன் உடல் வலிமையும் திறமும் உடைய கப்பலோட்டி. அத்துடன் தன் குடும்ப மதிப்பிலும் நேர்மைப் புகழிலும் அவன் ஓயாத அக்கரை செலுத்தியிருந்தான். எனவே லெத்தியரி தன் கப்பலுக்குரிய பொறுப்பை அவனிடம் விடத் தயங்கவில்லை. ஆயினும் குளூபினை விடத் தகுதி வாய்ந்த ஒரு ஆளை அவன் தேடாமலிருக்க முடியவில்லை. குளூபின் தன் கப்பல்மகவுக்கேற்ற மருமகன்.

ஆனல் தன் பெண்மகவுக்கேற்ற மருமகனல்ல. இரு மகவுகளையும் ஆண்டு இயக்கவல்ல ஓர் இளைஞனை அவன் உள்ளம் நாடிற்று.

லெத்தியரியின் எளிய முரட்டு வாழ்க்கைக்கோட்பாட்டிற்கு ஒரே ஒரு விலக்கு இருந்தது. பெண்கள் எப்போதும் மென்மையான, அழகிய, தூய, வெண்ணிறக் கரங்கள் உடையவராயிருக்கவேண்டுமென்று அவன் கருதினன். அத்தகைய கையைத் தேடியே அவன் இளமைக்காலக் காதல்கள் கருகின. இரண்டே இரண்டு பெண்கள் தான் அவன் குறிக்கோளுக்குரிய கைகளை உடையவராயிருந்தனர். ஆனல் ஒருத்தி குணங்கெட்டவள். மற்றொருத்தி குடிகெட்டவள். இருவரையும் அவன் மறுத்து ஒதுக்கினன்.

காதலின் தோல்வி புதல்வி வளர்ப்பில் அவன் ஊக்கத்தைப் பெருக்கிற்று. அவள் கையழகே அவனை அவளிடம் பாசம் கொள்ளச் செய்தது. அதை எவ்வகையிலும் பாதுகாக்க அவன் முனைந்தான். தோட்ட வேலையின் பயிற்சி தவிர, டெரூசெட்டை அவன் எதுவும் செய்யவிடுவதில்லை. கடலுடன் போராடும் விலங்காக அவன் வாழ்ந்தான். வானிற் பறக்கும் பறவையாக அவளை வளர்த்தான். வகைவகையான ஆடை அணிகள், கவலையற்ற இன்பக் கேளிக்கைகள், ஆடல் பாடல்கள் ஆகியவற்றில் குறைவற்று, டெரூசெட் மனித உருவம் படைத்த ஓர் இன்பப் பறவையாகவே வளர்ந்தாள்.

## கடலோட்டப் பந்தயம்

கில்லியட்டிடம் கொர்ஸ்னி மக்கள் கொண்ட வெறுப்பு அணிமையில் ஒரு சிறிது மாறியிருந்தது. ஆண்டுதோறும் நடைபெறும் கடலோட்டப் பந்தயத்துக்கு இவ்வாண்டு

ஒரு புது முறுக்கு ஏற்பட்டது. பந்தயத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு ஒரு டச்சுப் பாய்க்கப்பலே பரிசாகக் குறிக்கப்பட்டிருந்தது. பந்தயத்துக்கான படகு அடித்தல மில்லாத தட்டைப் படகு. அதில் ஒவ்வொரு போட்டி யாளரும் சென்று படகு நிறையக் கல் ஏற்றிக்கொண்டு மீள வேண்டும். குறைந்த நேரத்திற்குள் மீள்பவனே வெற்றி பெற்றவனாவான்.

மிகப் பலர் போகும் பயணத்திலேயே சோர்ந்துவிட் டனர். மீதிப்பேரும் திரும்பு பயணத்துக்கு உடைந்தனர். கில்லியட் இப் படகின் பண்பறிந்து பாய்களின் தொங்கல் களைத் தளர்த்தியாகப் பிடித்துக்கொண்டான். இதனால் காற்றின் அளவுக்குத் தக்கபடி பாய்கள் விரிந்து சுருங்கின. போகும் பயணமும், வரும் பயணமும் வெற்றிகரமாக முடிந்தன. திரும்பு பயணத்தில் பந்தயத்துக்குக் குறிக்கப் பட்ட கற்களைமட்டு மன்றி, அவற்றிடையே கிடந்த ஒரு சிறிய பீரங்கியையும் விழாக்காலக் கேளிக்கைப் பொருளாக அவன் கொண்டுவந்தான்!

பந்தயத்தில் குறிக்கப்பட்ட பாய்க்கப்பல் அவனுக்குப் பரிசாக அளிக்கப்பட்டது.

அது உறுதிவாய்ந்த பழய கட்டுமானமுடைய கப்பல். அதை ஓட்டும் திறமுடைய பழய கப்பலோட்டி இறந்த பின், யாரும் அதை ஓட்டவோ வாங்கவோ முன்வரவில்லை. பயன்படுத்தத்தக்கவர் விலைக்கு வாங்காதது கண்டே, அதைப் பரிசுப் பொருளாக்கிப் பயன்படுத்தக்கூடியவருக்கு அளிக்க ஏற்பாடு செய்திருந்தனர். எனவே இப்பரிசு, பரிசு மட்டுமல்ல; கில்லியட்டின் தனிப்பட்ட அருந்திறத்துக்கும் அது ஒரு சான்றாயிற்று,

கெர்ன்ஸி மக்களில் இன்னும் ஒரு சில பேய் பக்தர் இருந்தனர். அவர்கள் இந்தத் தனித்திறத்தைக்கூட அவன் தனித்திறம் என்று ஏற்க மறுத்தனர். "படகை மனிதன் ஓட்டவில்லை. பேய்தான் ஓட்டிற்று. படகில் ஏறுமுன் அதில்அவன் ஒரு மாத்திரைக்கோலை நட்டுவைத்திருந்தான்"

என்று அவர்கள் கூறினர். மாத்திரைக்கோலை யாரும் காண வில்லை. கண்டிருக்கவும் முடியாது. ஆனால் நம்பிக்கை இதனால் மாறவில்லை. மாத்திரக்கோல் மாயமாத்திரைக் கோலாகவல்லவா இருக்கவேண்டும் என்று அவர்கள் விளக்கங்கூறினர்.

•

## கனவுக் காதல்

கில்லியட் செயல் வீரன். ஆனால் வாய் பேசாதவன்; அவன் உள்ளத்தின் காதலும் ஊமைக்காதலாகவே உள்ளூர முதிர்ந்து வளர்ந்தது. ஆனால் மற்றச் செயல்களை வாய் பேசாமல் நிறைவேற்றிவிடலாம். வாய் பேசாமலே கன வுலக எண்ணங்களை நனவுலகச் செயல்களாக்குபவர் உண்டு. கில்லியட் அத்தகையவன். அவன் ஒரு கனவாளன். ஆனால் காதல் கனவு நாகரிகசமூகத்தில் பேச்சுமூச்சின்றி எங்ஙனம் நனவாகும்?

அவன் அடிக்கடி அவளைச் சந்திக்க விரும்பினான்— ஆனால் அவன் நாடியது, தான் அவளைக்காணவே யன்றி அவள் தன்னைப் காண்பதன்று. அவள் கால் பதிந்த இடத்தை அவன் கண்களில் ஒத்திக்கொண்டான். அவள் சென்ற திக்கை நோக்கி வெறித்துப் பார்த்துக் கொண்டிருந் தான். அங்கு மிங்கும் நின்று அவள் வீட்டு வாயிலை, சாளரங்களை அவன் உற்றுக் கவனித்தான். பலமணிநேர முயற்சியின் பின் அவள் தலையணியின் தும்பு தெரிந்தால், பின் தானே அருகு தெரிந்தால், அவன் முயற்சிக்கு நிறைவு ஏற்பட்டுவிடும். மறுதடவை காண அவன் நாள் கணக் காணலும் பொறுத்திருப்பான். ஆனால் காட்சியை அடுத்துச் சந்திப்பு, சந்திப்பை அடுத்துப் பழக்கம், பழக்கதைத் யடுத்து நட்பு என்ற படிகள் அவனுச்கு எட்டாப் புதிய அனுபவங்களாயிருந்தன.

அவன் வீட்டுத் தோட்டமும் அவள் வீட்டுத் தோட்டமும் அடுத்தடுத்தே இருந்தன. இடையே கொடி படர்ந்த ஒரு இரும்பு முள் வேலிதானிருந்தது. வேலியின் இப்புறமிருந்த குத்துக்கல்லில் அவன் சென்று கல்லுடன் கல்லாய்க் காத்திருப்பான். மாலையில் அவள் உலவும்போது அவள் ஆடையின் சலசலப்பு அவன் உள்ளத்துக்குத் துடிப்பூட்டும். நிலவில் அவள் நிழலுருக் கண்டு அவன் மெய் மறந்திருப்பான்.

அவள் அடிக்கடி ஸ்காட்லந்து இசைக்கருவியொன்றைக் கைக்கொண்டு, 'என்னினிய டண்டி' என்ற பாடலைப்பாடுவாள். அவனும் அதை ஆர்வத்துடன் கேட்டுப் பாடப்பழகினான். சில சமயம் அவனும் அதே பாட்டைப் பாடுவது அவள் காதில் விழும். தன் குறும்புச் செயலை அவன் தவறாகக் கருதினான் என்று சில சமயம் அவளுக்குச் சோபம்வரும்; சில சமயம் பழய குறும்புணர்ச்சி அவனைக் கண்காணாமலே நையாண்டி செய்யத் தூண்டும். உண்மையில் அவள் உடல் வளர்ச்சியடைந்த அளவு அவள் உள்ளம் வளர்ச்சியடையவில்லை. காதலின் இடத்தில் இன்னும் சிறுமியின் குறும்புதான் நிரம்பியிருந்தது.

'என்னினிய டண்டி'யின் இசை சிலசமயம் லெத்தியரியின் காதிலும் படும். முதலில் அவன் அதனை இயல்பாக யாரோ பாடுவது என்று நினைத்திருந்தான். ஆனால் பல இடத்திலும் பல திசையிலுமிருந்து ஒரே குரலில் பாட்டு ஒலிப்பது கேட்டதும், அவன் அதைப் புரிந்து கொண்டான். 'காதல் என்பது மறைந்து விளையாடும் விளையாட்டன்று; நேராகப் பெண்களிடம் சென்று காதலிப்பது நல்ல இளைஞர்களுக்கு அழகுமல்ல' என்ற கோட்பாடுடையவன் லெத்தியரி. ஆகவே கில்லியட் காதலிப்பதானால், தன்னிடமே 'நேரில் வருவதற்குகென்ன? இப்படி பாடுவதால் என்ன பயன்?' என்று அவன் முணுமுணுத்துக் கொண்டான்.

நேரில் வந்திருந்தாலும் உண்மையில் பயன் இருந்திருக்க முடியாது. மறைவாகச் செயலாற்றினாலும் எந்தப் பயனும் ஏற்பட்டிருக்க முடியாது. ஏனென்றால் டெரூசெட் உண்மையில் எந்த இளைஞனுடனும் தன் வாழ்வை இணைத்துவிட எண்ணவில்லை. அவள் வாழ்க்கையைப் பொழுது போக்குப் போன்ற சிறுவர் விளையாட்டாக மட்டும் எண்ணினாள். ஆகவே தன்னை நாடிவந்தவர்கள் எல்லாரையும் அவள் குறும்பு செய்து நையாண்டி பண்ணினாள். லெத்தியரியும் எவரிடமும் பாசம்கொள்ளவில்லை. உண்மையில் அவன் விரும்பிய மருமகன் இலக்கணத்தை மகளும் அறியவில்லை; எவரும் அறியவில்லை. அம்மருமகன் நன்றாக உழைத்துப் பொருள் திரட்டவேண்டும். அவள் வேலை செய்யாதபடி பார்த்து எல்லாவேலையையும் அவனே செய்யவேண்டும். அவளைத் தான்பார்ப்பது போலப் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வளவும் போதாது. அவன் அவளுக்குக் கணவனாய், அவள் உடன்பிறந்தாளான டியூராண்டுக்கும் ஒரு திறமை வாய்ந்த மீகாமனாய் இருக்கவேண்டும்! அவள் கணவனாயிருக்கப் போதிய இளமையும், டியூராண்டின் மீகாமனாயிருக்கப் போதிய பயிற்சித்திறமும் அவனிடம் இருக்கவேண்டும்.

இந்த இலக்கணத்தை நினைத்துப் பார்த்தால் எந்த இளைஞனையும் அவன் டெரூசெட்டிடம் அணுக விடவில்லை என்பதில் நாம் வியப்படைவதற்கில்லை. வந்த ஒரு இளைஞனைக்கூட அவர் மறுத்துவிட்டார்!

ஆனால் அதேசமயம் காதலே இல்லாத கில்லியட்டின் உள்ளத்தில் டெரூசெட் காதலை எழுப்பினாள். திருமணத்தை நினையாத அவன் நெஞ்சத்தில் அவள் திருமண எண்ணத்தைத் தூண்டினாள்.

கில்லியட்டினிடம் அவள் தாய் இறக்கும்போது கொடுத்த ஒரு இருப்புப் பெட்டி இருந்தது. அதில் ஓர் இளம் பெண்ணுக்கு வேண்டிய ஆடை அணிமணிகள் யாவும் நிரப்பப்பட்டிருந்தன. அவற்றின்மீது ஒரு

அட்டைத் துண்டில் "உன் மனைவிக்கு, நீ திருமணம் செய்துகொள்ளும்போது!" என்று அன்னை தன் கைப்பட எழுதியிருந்தாள்! கில்லியட் இப்போது அதை அடிக்கடி எடுத்துத் திறந்துப் பார்ப்பான். அவ்வாடை அணிமணிகளை அவன் தன் மனக்கண்முன் டெரூசெட்டுக்கு அணிவித்து அழகு பார்ப்பான்!

காதலின் ஆற்றல் பெரிது. படையின் ஆற்றல், நகர் காவல் படையின் ஆற்றல், வேவுப்படையின் ஆற்றல் ஆகிய எதுவும் அதற்கு ஈடல்ல. கில்லியட் அவ்வாற்றலால் டெரூசெட் என்ன நேரம் என்ன செய்வாள், என்ன நேரம் என்ன உடை உடுத்திருப்பாள் என்பதை அறிந்தான். அவள் விருப்பு வெறுப்புக்கள் யாவும் அவன் கற்றுணர்ந்தான்.

அவன் விரும்பிய மலர்கள், அவள் விரும்பிய காய்கறி கிழங்குகள் அவன் தோட்டத்தில் பயிராயின. யாரிடமிருந்து வந்தனவென்று தெரியாமலே டூஸ் கிரேஸ் என்ற பிராவேயின் பணிப் பெண்டிர் மூலம் அவை பக்தனிடமிருந்து தெய்வத்திடம் சென்று சேர்ந்தன.

## "உறங்கினவன் விழிப்பதில்லை"

ஸெண்ட் ஸாம்ப்ஸனில் சமய ஊர்வட்டத் தலைவராயிருந்த தூய திரு. ஜாக்கெமின் ஹெரட் வின்செஸ்டர் மாவட்ட முதல்வரின் துணைவராக உயர்வு பெற்றிருந்தார். அவரிடத்தில் புதிய ஊர்வட்டத் தலைவராக திரு. எபினிஸர் காட்ரே என்ற ஓர் இளைஞன் வரவிருந்தான். ஸெண்ட் பீட்டர்ஸ் துறைமுகத்தில் சென்று மக்கள் அவனை வரவேற்கக் காத்திருந்தனர். ஆனால் அன்று கடலில் புயலும் பனியும் அடித்துக்கொண்டிருந்தன. இங்கிலாந்திலிருந்து

புதிய தலைவரை இட்டுவரவிருந்த காஷ்மீர் என்ற கப்பல் வர நேரமாயிற்று. வழியில் புயலால் அழிந்து அமிழ்ந்த மற்றொரு கப்பலின் ஆட்களை மீட்பதில் 'காஷ்மீர்' ஈடுபட்டிருந்ததனால், வருகை தாமதப்பட்டது.

புதிய தலைவர் வந்து பதவி ஏற்ற சில நாட்களுக்குள் ஒருநாள் கில்லியட் கடற்கரையில் உலாவிக்கொண்டிருந்தான்.

ஸெண்ட் சாம்ப்ஸன் துறைமுகத்தை அடுத்துத் தீவின் ஒரு நிலமூக்கின் நுனியில் காண்டாமிருகத்தின் கொம்பு போல ஒரு பாறை இருந்தது. வேலி இறக்கத்தின்போது அது கரையுடன் சேர்ந்தும், வேலி ஏற்றத்தின்போது கரையிலிருந்து பிரிந்து கடலுக்குள் பாதிக்குமேல் அமிழ்ந்தும் இருந்தது. செங்குத்தாகப் பல ஆள் உயரம் உயர்ந்திருந்த அப்பாறையின் நடுப்பகுதி ஒரு சாய்வு நாற்காலிபோல அலைகளால் செப்பம் செய்யப்பட்டிருந்தது. அதைக் கண்ட எவரும் அதிலிருந்து கடற்காட்சிகளைக் காண விரும்பாதிருக்க முடியாது. அந்த அவாவை இன்னும் தூண்டும் முறையில் அந்நாற்காலியைச் சென்றெட்டுவதற்கென்றே படியமைக்கப்பட்டதைப்போல் பாறையில் பல படிகள் அமைந்திருந்தன.

மனிதர் கலையுடன் போட்டியிடும் இயற்கைக் கலைப் படைப்பாக அது தோற்றமளித்தது. ஆனால் வஞ்சகமிக்க எந்த மனிதரும் திட்டமிடாத வஞ்சகத் திட்டமும் அதில் அமைந்திருந்தது. எவரும் அதில் ஏறி உட்கார்ந்ததும், அலைதவழ்ந்து வரும் தென்றல் அவர்கள்மீது விசிறும் சங்கு சோழிகள் நீரில் சுழன்று அவர்களுக்கு இசை பாடும். நீர்த்திவலைகளை அவர்கள்மீது தூவிக் கடல் அவர்கள் உடலில் மாறி மாறி வெதுவெதுப்பும் குளிர்ச்சியும் ஊட்டும். கடலின் தொலைக்காட்சிகள், வான விளிம்பில் மறையும் கப்பல்களின் பாய்கள், அவர்கள் கண்களுக்கு விருந்தளிக்கும். இந்த இன்பங்களிடையே அவர்கள் மெய்ம் மறந்திருப்பர், அல்லது தூங்குவர். ஆனால் அவர்களே அறியாமல் அலைகள் படிப்படியாய்

எழுந்து வரும். காலடியில் நீர் வந்தபின்கூட அதில் இருப்பவர் நிலைமையை உணரமாட்டார். அவர் உணர்ந்தாலும் அப்போது பயன் எதுவுமில்லை. முன்னுள்ள படிகளில் இறங்கிச் செல்லமுடியாது. அவை கடலில் முழ்கிவிடும். அதைத் தவிர வேறு இறங்கும் வழியோ அடையும் வழியோ கிடையாது.

நாற்காலி ஒரு நாற்காலி அல்ல. ஒரு மாயச்சிறை என்பது அப்போதுதான் இருப்பவர்களுக்குத் தெரியும். முதுகுக்குச் சாய்வாயமைந்த பின்புறப் பாறையோ இருபது முப்பது அடி உயரமுள்ளது. அது செங்குத்தாகவும் வழவழப்பாகவும் இருந்ததால் அலைக்குத் தப்பி அதில் ஏறுவதோ தொற்றிக்கொண்டு சிறிது மிதப்பதோ கூட முடியாது. நாற்காலியில் அகப்பட்டவர் அலைக்கு இரையாவது தவிர வேறுவழியிராது.

அவர் கூக்குரலிட்டால் கூட, அவர் தவிர வேறு யாருக்கும் அது கேளாது. அப்பாறையைச் சுற்றிக்கடல் அவ்வளவு இரைச்சலிடும். யாரும் அவரைக் கண்டு காப்பாற்ற வரவும் முடியாது. மக்கள் கண்களியிருந்து அப்பாறை கரையில் மற்றொரு பாறையால் மறைக்கப் பட்டிருந்தது. மேலும் எளிதில் எவரும் படகில் அந்தப் பக்கம் வரமுடியாதபடி பாறையைச் சுற்றி அலைகளின் குமுறலும் வெள்ளத்தின் சுழற்சியும் மிகுதியாயிருக்கும்.

அப்பாறையின் பெயர் 'கில்டால்மர்' என்பது. பண்டைக் கெல்த்திய மொழிகளில் அதன் பொருள் "உறங்குபவன் மீண்டும் விழிக்கமாட்டான்" என்பது.

கில்லியட் கடற்கரையில் உலவும்போது அவன் கடல் ஏறிவருவதைக் கவனித்தான். சற்றுமுன் யாரோ புதிய ஆள் கில்டால்மரை நோக்கிச் செல்வதை அவன் பார்த்திருந்தான். ஆள் திரும்பி வந்ததா அல்லவா என்பதை அவன் கவனிக்கவில்லை. ஆனால் போய்ப் பார்க்கவும் நேரம் தவறிவிட்டது. கடல் பாறையைச் சூழ்ந்துகொண்டது. கில்லியட் உடனே சென்று தன் படகைக் கொண்டுவந்தான். கட

லடித்தடத்தின் மேடுபள்ளங்கள் வளைவு நெளிவுகள் எல்லாவற்றையும் இளமை முதல் அறிந்தவன் அவன். ஆகவே அவன் திறம்படப் படகைக் கில்டால்மருக்கு முன்புறமாகச் செலுத்தினான்.

இன்னும் நாற்காலியில் அமர்ந்த ஆள் அசையவில்லை. தனக்கு நேர்ந்த இடரை அவன் உணர்ந்ததாகவும் காணவில்லை. உண்மையில் அவன் கண்களை மூடிக்கொண்டே தான் இருந்தான்.

"யாரையா அது; சாகத் துணிந்த பேர்வழி?" என்று கேட்டான் கில்லியட்.

கண்கள் திறந்தன. 'என்ன செய்தி?" என்றான் அவன்.

"உன்னைச் சுற்றிப் பார், என்ன செய்தி என்று!"

புதிய ஆள் பார்வை கடலில் விழுந்ததே அவன் உடல் நடுங்கிற்று. "ஐயோ, தெரியாமல் சிக்கிவிட்டேனே" என்றான்.

தண்ணீர் இதற்குள் படிகள் அனைத்தும் கடந்துவிட்டன. இருப்பவன் காலை மேலே தூக்கிக்கொண்டான். இருக்கை வரையும் தண்ணீர் ஏறிவிட்டது.

கில்லியட் படகைப் பாறைக்கு நேர் கீழே கொண்டு சென்றான். ஒரு காலைப் படகில் ஊன்றி, பாறைமீது படகு மோதாமல் ஒரு கையையும் அதைப் கொண்டு ஒருகாலையும் பிடித்துகொண்டான். பின் பாறைமீது இருப்பவனை நோக்கி "அஞ்சவேண்டாம். என்படகில் குதித்து விடுங்கள்" என்றான்.

பிழைப்போம் என்ற நம்பிக்கையில்லாமலே அவன் கைகால்களை நீட்டினான். ஆனால் ஒருகால் கில்லியட்டின் பிடிக்கு அகப்பட்டது. கில்லியட் அவனைப் படகிற்குள் பிடித்திழுத்து அமர்த்திக்கொண்டு கரை சேர்ந்தான்.

அந்த ஆள் வேறுயாருமல்ல. புதிதாக வந்த ஊர்த் தலைவர் காட்ரேதான்.

அச்சந் தெளியத் தொடங்குமுன்பே அவன் ஓடினன்.

சிறிது தொலை சென்றபின் அறிவு சற்றுத் தெளிந்து ஏதோ நினைத்துக்கொண்டு அவன் மீண்டும் கில்லியட்டிடம் வந்தான். முகம் நன்றிகூற விரும்பிற்று. ஆனால் நாக்குக் குழறிற்று. சட்டைப் பையில் கையிட்டு அவன் ஒரு புத்தகத்தை எடுத்து கில்லியட்டிடம் அளித்தான்.

அது ஒரு விவிலிய நூல்.

அவன்தான் புதிய தலைவன் என்பதை கில்லியட் இப்போது உணர்ந்தான்.

## குருட்டு நம்பிக்கையும் குருட்டு யோகமும்

ராங்தேன் காணமற்போய்ப் பத்து ஆண்டுகள் ஆய்விட்டன. பேய்க்கப்பல் என்று பழிக்கப்பட்ட டியூராண்டு, ஸெண்ட் ஸாம்ப்ஸனின் வாழ்விலும் கடற்கால் தீவுகளின் வாழ்விலும் நன்றாகப் பழகி ஒரு நிலையான இடம்பெற்று விட்டது. லெத்தியரி இப்போது ஸெண்ட் ஸாம்ப்ஸன் மக்களின் முழு ஆர்வத்துக்கும் உரியவனாய்விட்டான். ஏனென்றால் ஃவிரான்சு நாட்டுக்கும் கெர்ஸ்னிக்குமிடையேயுள்ள வாணிகம், போக்குவரத்து முழுவதும் இப்போது ஸெண்ட் ஸாம்பஸன் மூலமே நடக்கத் தொடங்கிற்று. ஸெண்ட் பீட்டர்ஸ் அத்தீவின் தலைநகரமாயிருந்தும் அதன் மதிப்புக் குறையத் தொடங்கிற்று. இதை உணர்ந்த ஸெண்ட்பீட்டர்ஸ் நகரத்தார் லெத்தியரியின் நீராவிக் கப்பலைத் தம் துறைக்கு மாற்றவேண்டுமென்று அவனிடம் வேண்டினர். அதற்காக அவன் அவாவைத் தூண்டவும் முனைந்தனர். ஆனால் லெத்தியரி தன் தாயக ஊர்ப்பற்றில் உறுதியாக நின்றுவிட்டான். ஸெண்ட் ஸாம்ப்ஸன் மக்க

ளிடையே இது அவன் மதிப்பை மிகவும் உயர்த்திற்று. அவன் அவர்கள் முடிசூடாமன்னன் ஆனுன்.

தொழில் துறையில் தோல்வியுற்றவர்கள் வெளிப் படையாக லெத்தியரியைப் பாராட்டினுலும், உள்ளூர அவன் கப்பலுக்கு ஏதேனும் கெடுதல் வருவது உறுதி என்று நம்பிக் காத்திருந்தனர். சமயவாதிகளும் இவ் வெண்ணத்துக்கு மறைமுக உதவியாயிருந்தனர். ஏனெனில் லெத்தியரியின் சமயத்துறை பற்றிய கட்டற்ற பேச்சு அவர்களுக்கு பிடிக்கவில்லை. லெத்தியரி சமயத் துறை யினர் என்றால் வெறுப்பவன். இது துறவுக்கோலமுடைய கத்தோலிக்க குருமார் கடந்து மற்ற இல்லறக் குருமா ரிடமும் பரவியிருந்தது. நம்பிக்கையும் மதிப்புமற்ற அவன் அவர்கள் குற்றங் குறைகளை எளிதில் கவனிக்கவும் சுட்டிக் காட்டவும் முடிந்தது. இது அவர்களுக்குச் சினமூட்டியது.

'பூசனை செய்யும் குருமாரெல்லாரும் பண்பில் பூனை யைப்போன்றவர்கள்' என்று வால்டேர் கூறுகிறார். லெத்தியரி இதை வாசித்தபோது,'அப்படியானுல் அப்பூனைகளை வெறுக் கும் நாயின் பண்பு என்னிடம் இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்' என்றான். குருமார் பொதுவாக அவன் புது நீராவி கப்பலை எதிர்த்தார்கள். இது அவன் வெறுப்பை இன்னும்மிகுதி ஆக்கிற்று. ஊர்வட்டத் தலைவன் விவிலிய நூலுக்கு விளக்க உரைபகரும்போது நரகத்தின் கோர தண் டனைகளை விரித்துரைத்துக்கொண்டிருந்தான். கேட்பவர்கள் உள்ளத்தில் இவற்றின் படிப்பினைகளை உறுதிப்படுத்த அவன் “கடவுளின் முழு நிறைவல்லமையை இவை காட்ட வில்லையா?” என்று கேட்டான். லெத்தியரி ஒரு மூலையி லிருந்து “கடவுள் கருணையுடையவர் என்றல்லவா நான் நினைத்தேன்” என்றான்.

டியூராண்டின் வெற்றிகூட இங்கிலையில் கப்பல் தொழிலில் நீராவிக் கப்பலின்வெற்றியாக மாறவில்லை. பாய்க்கப்பல் கழகங்களுக்குச் செல்வர் முதலிடந்தர இன்னும் தயங்காது முன்வந்தனர். நீராவிக்கப்பலென்றால்

இன்னும் தயங்கவே செய்தனர். ஒரு செல்வர் "நீராவிக் கப்பலா? அதில் ஒருநாள், இரண்டுநாள் பயணம் செல்வதற்குக் கேடில்லை. என்றேனும் 'ஒருநாள்தானே சாக வேண்டிவரும். ஆனால் முதலிடுவதானால், புகையிலும் கரியிலும் யார் முதலியிடுவார்கள்" என்றார்.

லெத்தியரியின் வெற்றி நீராவியின் வெற்றி என்று எவரும் கொள்ளவில்லை. அவர் திறமையின் வெற்றி என்றும் எவரும் கருதவில்லை. அது அவருக்கு ஒரு நல்லகாலம்; அது அவர் குருட்டுயோகம் என்றுதான் பலரும் எண்ணினர்.

குருட்டுயோகம் என்று பிறர் நினைப்பதற்கேற்ப, ஒரு குருட்டு இடையூறு அதன்மீது தன் அம்பை எய்தது.

## குளூபினின் மறை திட்டங்கள்

செவ்வாய்க்கிழமைதோறும் டியூராண்டுடன் குளூபின் கொர்ஸ்னியிலிருந்து புறப்பட்டு மாலையில் ஸெண்ட் மலோ போய்ச் சேர்வான். சரக்கிறக்கவும் ஏற்றவும் அங்கே இரண்டுநாள் தங்கிவிட்டு வெள்ளிக்கிழமை புறப்பட்டு மீண்டும் கொர்ஸ்னி வருவான். டியூராண்டின் தலைமை அலுவலகம் ஸெண்ட் ஸாம்ப்ஸனில் லெத்தியரியின் வீட்டில் அவன் அறையாகவே இருந்தது. ஃவிரஞ்சுப் பக்கத்து அலுவலகம் ஸெண்ட் மலோவிலுள்ள ஜீன் ஆபொர்ஜ் என்ற அருந்தகத்திலமைந்திருந்தது. குளூபின் ஸெண்ட் மலோவில் தங்கும் பொழுதைப் பெரும்பாலும் இங்கேயே கழித்தான். இரு நாடுகளின் சுங்கச் சாவடிக்காரரும் களையோரக் கப்பலோட்டிகளும் வந்து கலக்குமிடம் இதுவே.

ஃவிப்ரவரி மாதத் தொடக்கத்தில் குளூபின் ஸெண்ட் மலோ சென்றிருந்தபோது, அருந்தகத்தில் எத்திறத்தவர்க

ளிடையேயும் ஒரே பேச்சுத்தான் ஊடாடிற்று. மூன்று பாய்களையுடைய கப்பலான தமோஷிபாஸில் மீகாமன் ஜூலா சிலி நாட்டிலிருந்து வரவிருக்கும் செய்தியே அது. பத்து நாட்களுக்குள் அவன் திரும்பவும் தென் அமெரிக்காவிலுள்ள அந்நாட்டிற்குப் போவான் என்றும் தெரிந்தது.

அடுத்த தடவை குளூஷின் ஸெண்ட் மலோ வந்தபோது கப்பலிருந்து இறங்குமுன்பாக கடல் தொலைநோக்கி மூலம் கரையைக் கவனித்தான். தொலையில் மீகாமன் ஜூலாவுடன் யாரோ ஒருவர் பேசியது தெரிந்தது. பேசியவர் கள்ள வாணிகத்துறை சார்ந்தவர் என்பது குளூஷினுக்குத் தெரியும். அவன் எப்போதும் தன் நேர்மையுடைமையைப் பகட்டாக காட்டி வந்ததால், எத்தகையவருடனும் அச்சமின்றிப் பழக முடிந்தது. பிறர் எவரும் கவனிக்காமலே அவன் தன் திட்டங்களைத் தன் மனம்போல் இடைஞ்சலின்றி நடத்தவும் முடிந்தது. ஜூலாவைக் கண்டது முதல் அவன் முகம் வெளிப்படையாக எப்போதும் போலவே இருந்தாலும், அது ஒரு செயலற்ற திரைபோல், அதன் பின்னுள்ள சுறுசுறுப்பான திட்டங்களை மறைக்க மட்டுமே உதவிற்று.

அவன் துப்பாக்கி செய்யும் கருமானிடம் சென்று "உன்னிடம் சுழல் துப்பாக்கி இருக்கிறதா?" என்று கேட்டான்.

கருமான் வாளா இருந்தான்.

"சுழல் துப்பாக்கி என்றால் என்ன என்று தெரியுமா?"

"தெரியும். அது ஒரு அமெரிக்க ஆயுதம்."

"அது கிடைக்குமா?"

"கைத்துப்பாக்கி கிடைக்கும். அது கிடையாது. அது இன்னும் வாணிகச் சாக்காகவும் வரவில்லை. ஃபிரஞ்சுக்காரர் அதை இன்னும் செய்வதில்லை. ஆனால் தனிபட்ட முறையில் தருவித்துத் தரமுடியும்."

"அது ஆறு முறைகள் சுடுவதாயிருக்கவேண்டும்."

"சரி"

"மிக நல்ல தரமாயிருக்கவேண்டும்"

"கொடுக்கிற பணம் எவ்வளவு நல்லதோ அந்த அளவு சரக்கின் உறுதிக்கும் நாங்கள் உத்தரவாதிகள்.

"எப்போது வர? எப்போது தருவீர்கள்?"

"அடுத்த தடவை வரும்போது?"

"ஓஹோ, என்னைத் தெரியும்போலிருக்கிறது, உங்களுக்கு. சரி வாங்கியது நான் என்று யாருக்கும் தெரிய வேண்டாம்."

குளூபினின் அடுத்த தனிப்பட்ட செயல் கப்பல் நடுக்கடல் சென்றபின் தொடங்கிற்று. அப்போது அவனுக்கு ஓய்வு கிட்டிற்று. அவன் தன் கப்பல் உள்ளறைக்குச் சென்று வழிப்போக்கர் பை ஒன்றை எடுத்து அதில் நீண்ட பயணத்துக்குரிய உணவுப் பண்டங்கள், கப்பல் நாழிகை வட்டில், கப்பலோட்டிகளின் முடிச்சுகளிட்ட ஒருவடம் ஆகியவற்றை அதில் வைத்துக் கட்டினான். பின் பையைக் கவண்கட்டி எறிவதுபோல எறியத்தக்க ஒரு கயிற்றில் கட்டினான்.

செர்ஸ்னி சென்றபின் அவன் துறைமுகத்திலிருந்து கையில் பையுடன் எங்கோ கிளம்பினான். நெடுநேரம் சென்று அவன் திரும்பி வந்தான். ஆனால் அப்போது அவன் கையில் பை இல்லை.

மறுதடவை ஸெண்ட் மலோ வந்தபோதும் குளூபின் மீண்டும் துப்பாக்கி செய்யும் கருமானை அடுத்தான். அவன் குளூபினை நகரின் மிகப் பாழடைந்த பகுதியிலுள்ள ஒரு அரும்பொருள் விலையகத்துக்கு இட்டுச்சென்றான். அதன் பெயர் ஜாக்ரிஸேட் என்பது. ஜாக்ரிஸேட் வெளிப்படையாகப் பழம்பொருள் வாணிகக் களமாகக் காட்சியளித்தது. ஆனால் விலாசமுடைய உலகத்துக்கும் விலாசமற்ற உலகத்துக்கும் ஒரு பாலமாக அது விளங்கிற்று. தங்க இடமற்ற

ஏழைகள், விடுதலைபெற்ற குற்றவாளிகள், சிறுதிருட்டு, வழிப்பறி செய்பவர், மோசடிக்காரர் ஆகியவர் ஒதுங்கி, குடிவரி கொடுத்தோ, கொடுக்காமலோ, வறுமையை மறைக்குமிடமாகவும் அது இருந்தது.

அவ்விடுதியில் பொன் வெள்ளி மாற்றுச் சித்து வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவன் இருந்தான். சித்து வெற்றிபெறும் என்ற நம்பிக்கையால் ஏழையர்களிடமிருந்து பிழிந்த பணத்திலிருந்து விடுதித் தலைவி அவன் தொழிலுக்கு இடமும் உதவியும் கொடுத்தாள். வீட்டின் எரிக்கத் தக்கபொருள் எதையும்—நாற்காலிகள், பெட்டிகள், ஏணிகள், விட்டம், வரிச்சுல்கள் யாவும்—அவனால் உலோகப் புடங்களுக்காக எரிக்கப்பட்டு வந்தன.

கருமான் வந்த செய்தி கூறவே, சித்தன் சுழல் துப்பாக்கி ஒன்றை எடுத்துவந்தான். அவன் அதற்கு ஆறு ஆங்கிலப் பொன் விலை கூறினான். கருமான் குறைத்துக் கேட்டும் அவன் இணங்கவில்லை. ஆனால் குளேபின் பேசாது அவனிடம் அவன் கேட்ட ஆறு பொன் கொடுத்துவிட்டு மீண்டாள்.

## பேயடைந்த மாடம் பிளீன்மாண்ட்

கெர்ஸ்னி ஒரு முக்கோண வடிவுள்ள தீவு. மூன்று மூலைகளிலும் நிலமுனை ஒவ்வொரு நில மூக்காக நீண்டிருந்தது. டார்டிவல் இம்மூலைகளில் ஒன்று. குளேபின் பிறந்து வாழ்ந்த இடம் இதுவே. இந்த இடம் கள்ள வாணிகக்காரருக்கு ஒரு சந்திப்பாகவும் அமைந்தது. அதற்கு வேண்டிய பல வசதிகளும் அங்கே இருந்தன.

நிலமூக்கின் கோடியில் ஒரு அழகிய மாடம் இருந்தது. அது ஒரு சிறுகுடும்பம் வாழத்தக்கதாய் அந்தசந்தமா

பிருந்தது. அதன் மூன்றுபுறம் கடல். மறுபுறம் ஒரு தோட்டப்பகுதி. தோட்டப்பகுதி பாழாய்க் கிடந்தது. மாடமும் பாழாகவே கிடந்தது. கடற்புறத்திலுள்ள மூன்று மதில்களில் ஒரு மதிலில் கதவோ சாளரமோ எதுவும் இல்லை. முன்னுள்ள கதவும் சாளரங்களும் செங்கலால் அடைபட்டிருந்தன. மற்ற ஒரு பக்கத்தில் இரண்டு சாளரங்கள் இதுபோலவே செங்கலால் அடைபட்டிருந்தன. ஒரே ஒரு பக்கம், தென்புறம் மட்டும் பலகணிகளில் கதவுகள் அகற்றப்பட்டுத் திறந்தமேனியாய் இருந்தன.

கிட்டத்தட்ட மாடத்தின் நாற்புறமும் கடல் இருந்தது. வேலி இறக்கத்தின்போது மட்டுந்தான் ஒரு சிறு இடைவழி இடுக்கு அதை நிலத்துடன் இணைத்தது.

இம்மாடத்தின் பெயர் பிளீன்மாண்ட். யாரும் அதன் பக்கம் நாடுவதில்லை — அதன் பெயர்கூடக் கூறுவதில்லை. ஏனென்றால் அதில் பட்டப்பகலில் கூடப் பெய்கள் நடமாடியதென்று மக்கள் நம்பினர்.

இடமும் சூழலும் இந்நம்பிக்கையும் சேர்ந்து கள்ள வாணிகக்காரருக்கு அதை ஒரு முதல்தர மூலதளமாக்கிற்று. எப்போதாவது யாராவது உள்ளே நுழைவதை மக்கள் கண்டாலும் கூட, அவர்கள் அதை எவரிடமும் கூறமாட்டார்கள். கூறினாலும் எவரும் அதைப் புலம் விசாரிக்கத் துணியமாட்டார்கள். உண்மையில் புலிக்கும் சிங்கத்துக்கும் அஞ்சாத ஊர்காவலர்களும் படைவீரர்களும் கூடப் பேய் என்றால் எட்டிப்பார்க்கமாட்டார்கள்.

திருடர், கள்ளக் காதலர், கள்ளவாணிகக்காரர் ஆகியவர்களின் செல்வாக்கினாலேயே உலகில் பேய்பற்றிய நம்பிக்கை நீர்வார்த்து அழியாமல் பேணப்படுகிறது என்னலாம்.

ஆனால் அச்சமும் சில தரத்தவருக்கு ஒரு ஆர்வத்தை ஊட்டுவதுண்டு. பண்டைக்கால மனிதன் அச்சத்திடையே

அன்பு செலுத்தினன். அச்சத்திடையேதான் அவன் இன்பமடைந்தான். ஆகவே அஞ்சிய பொருளையெல்லாம் அவன் கடவுளாகக் கண்டு வணங்கினன். இன்னும் அதனாலேயே பக்தியை நாம் பயபக்தி என்கிறோம். அச்சத்தைப் போலவே துன்பமும் பலரால் விரும்பப்பட்டு இன்பமூட்டுவதுண்டு. சாவுக் காட்சி கொலைக்காட்சிகளையும், துயரக் கதைகளையும் நாடகங்களையும் நாம் காண விரும்புவது இதனாலேயே. இதே வகையான ஆர்வங் கலந்த அச்சம், அச்சங்கலந்த ஆர்வம் டார்டிவலிலுள்ள மூன்று சிறுவர்களை ஒருநாள் இயக்கிற்று. அவர்கள் தொலைவிலிருந்தே அஞ்சி அஞ்சி, பதுங்கிப் பதுங்கி, பீளீன்மாண்ட் பக்கமாக வந்தார்கள். அச்சம் கால்களைப் பின்னிழுத்தன. ஆர்வம் தலையை முன்தள்ளின.

சிறுவரில் இருவர் கொர்ஸனிக்காரர். அவர்கள் திண்ணிய உடலுடையவர்கள். ஆனால் அச்சம் அவர்களைக் கோழைகளாக்கிற்று. மூன்றாவது சிறுவன் ஃவிரஞ்சுக்காரன், 'நோஞ்சு'லான உடலுடையவன்; ஆனால் அச்சம் அவன் ஆர்வத்தைத் தூண்டி அவனை வீரனாக்கியிருந்தது.

அவர்கள் இரவெல்லாம் பதுங்கிப் பதுங்கி மாடத்தைச் சுற்றிவந்தனர். திரும்பச் செல்லும் பாதையைக் கடல் அடைத்தது. அவர்கள் முதலில் உள்ளே ஒரு பேயைக் கண்டார்கள். எப்படியோ மற்றொரு பேயும் உள்ளே வந்தது. பேய்கள் பேசின. பேய்கள் பேச்சுச் சிறுவர்களுக்கு எப்படி புரியும்! ஆயினும் ஒருவன் வெளிநாட்டுக்குப் போக விரும்பினான். அடுத்தவன் அவனை இவ்விடத்திலேயே காத்திருக்கும்படி கூறினன். முதல்வன் கையில் கொண்டுவந்த பயணப்பையை அங்கே விட்டு விட்டுச் சென்றான். பேய்களும் மனிதர்களைப் போலவே நடந்துகொண்டன.

சிறுவர்கள் இவ்வளவு செய்தியும் கேட்டார்கள். ஆயினும் அவர்கள் தாம் கண்டதுபேய்களே என்று கருதிச் சென்றனர்.

ஸெண்ட் மலோவையடுத்த கடற்கரையெங்கும் கள்ள வாணிகக்காரரும் சமயச் சட்டங்கள், அரசியற் சட்டங்கள் ஆகியவற்றுக்குத் தப்பியவரும் ஓடிவிடாமற் காக்கக் கடற் காவற்காரர் அமர்த்தப்பட்டிருந்தனர். பொதுவாக அக் காலத்தில் எங்கும் இந்நிலைமை இருந்தது. சிறப்பாக ஃவிரான்சில் அரசியலும் சமயமும் மக்கள் வாழ்வின்மீது இன்ன சமயம் என்றிராது விழும் இடி மின்னல்களாகவே இருந்தன. கத்தோலிக்கராயிருந்தால் ஒரு அரசாங்கத் துக்கு அஞ்சவேண்டும். புரோட்டஸ்டாண்டாயிருந்தால் மற்றொரு அரசாங்கத்துக்கு அஞ்சவேண்டும். பலர் இரண் டுக்கும் தப்பிப் பிழைக்கவேண்டும். ஃவிரஞ்சுப் புரட்சிக் கால முதல் அரசியல் கட்சிகளும் கொள்கைகளும் சமயத் தைப்போல் மக்களைப் பிரிவினைசெய்து அலைக்கழித்தன.

இத்தகைய வாழ்விலிருந்து தப்பியோடியவர்கள் பலர். தப்பியோடியவர்கள் அமைத்த நாகரிகங்கள்தான் புதிய அமெரிக்காவை வளர்த்தது. 19-ம் நூற்றாண்டின் தொடக் கத்தில் சமய அகதிகள், அரசியல் அகதிகள், கள்ள வாணிக அகதிகள் ஆகியவர்கள் தப்பிப் பிழைத்தோடாமல் காக்கவே கடல் காவலர் அமர்த்தப்பட்டிருந்தனர்.

தப்பியோடுபவர்கள் நேரே கப்பலில் ஏறாமல், கடற் கரையிலுள்ள பாறைகளிலிருந்து படகில் சென்று கப்ப லேறுவர். இதைத் தடுக்கும் எண்ணத்துடன் ஸெண்ட் மலோவை அடுத்த பாறையொன்றின்மீது கரை காவலன் 618 நின்றிருந்தான். அவன் தொலை நோக்கி வழியாக வெளிநாடு புறப்பட்ட தமோலிப்பாஸை நாடிப் பார்வை யைச் செலுத்தியிருந்தான். கப்பலிலிருந்து ஒரு படகு பாறையை நோக்கி வந்துகொண்டிருந்தது. அது எங்கே யாரை ஏற்றிக்கொண்டு போகிறதோ என்று அவன் தனக்குள் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

படகைச் சந்திப்பதற்காகப் பாறைக்கு வந்த வடிவம் அவன் பின்னல் பதுங்கி வருவதை அவன் அறியவில்லை!

கப்பலைப் பார்த்தபடியே கரைகாவலன் — 618 பாறை கடலை எட்டிப் பார்க்கும் இடம் வரை வந்திருந்தான். அதற்குள் பின்னாலிருந்தவன் மெல்ல வந்து அவனைக் கடலினுள் தள்ளிவிட்டான்!

கப்பலை உளவு பார்க்க வந்த பகைவன் ஒழிந்தான் என்று அவன் மகிழ்ந்தான். தன்னையே உளவு பார்த்து வந்த மற்றொருவன் தன்னை எதிர்க்கப் பின்னாலிருப்பது அவனுக்குத் தெரியாது.

படகு அருகில் வந்துவிட்டது. இன்னும் சில கணங்களில் அவன் கப்பலேறி அயல்நாடு சென்றுவிடலாம். ஏற்கெனவே நிரம்பப் பணம் திரட்டியாய்விட்டது. இனி இன்னும் பெரும் பொருள் திரட்ட அவன் திட்டமிட்டான்.

பின்னாலிருந்து ஒரு குரல் ராங்தேன் என்று கூவிற்று!

அவன் திரும்பிப் பார்த்தான். அது குளுபின் குரல்! முதலில் இன்னது செய்வதென்று அவனுக்கு விளங்கவில்லை. பின் எப்படியும் அவன் உளவுக்கு ஒரு முடிவு கட்டுவது என்று முனைந்தான்.

அதற்குள் குளுபின் கையிலிருந்த சுழல் துப்பாக்கியை நீட்டிக்கொண்டு "ஒரு அடி முன் வைக்காதே! அப்படியே நில்!" என்றான்.

அவன் நின்றான். "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"உன்னிடம் என்னவெல்லாம் இருக்கின்றன? சொல்!"

"நீ யார் கேட்க?"

"நான் சொல்கிறேன். வலதுபுறப் பையில் கைக்குட்டை. சாவிக் கொத்து. இடது பையில் கைத்துப்பாக்கி. ஒரு புகையிலைப் பெட்டி. அதில்... எழுபத்தையாயிரம் வெள்ளிக்கு மேற்பட்ட தொகை... சரிதானா?"

“ஆம்.”

“அத்தனையும் கொடு.”

“இது வழிப்பறி கொள்ளையா?”

“கொடு என்றால் கொடு”

“பாதி கொடுக்கிறேன். பங்கிட்டுக் கொள்வோம் குளுரபின்!”

“நான் வழிப்பறிக்காரனென்று நினைத்தாய்?”

“பின்!”

“என் கப்பல் தலைவரிடமிருந்து நீ ஐம்பதினாயிரம் திருடிச் சென்றாய். வட்டி முதலுடன் அது எழுபத்தையாயிரம் ஆகிறது. அதையே அவர் சார்பில் கேட்கிறேன்.”

புகையிலைப் பெட்டி எறியப்பட்டது.

“முதுகுகாட்டி நில்” செய்யவே நேர்ந்தது, ராங்தேன் சொன்னபடி.

ராங்தேனைக் குறி பார்த்துக்கொண்டே குளுரபின் குனிந்து புகையிலைப் பெட்டியைத் திறந்தான். ஒரு பத்திருபது வெள்ளி மிகுதியாயிருந்தது. அதை எடுத்துக் கொண்டு பெட்டியை மூடினான்.

“திரும்பி நிற்கலாம்!”

ராங்தேன் திரும்பினான்.

“இதோ, எனக்குச் சேரவேண்டியது எழுபத்தையாயிரம்தான் இதை எடுத்துக்கொள்” என்று சில்லறையைச் சுழற்றி எறிந்தான். ராங்தேன் முகஞ் சுளித்துக் கொண்டு சிறி அதைக் கடலில் வீசினான்.

“சரி, உன் விருப்பம் அது. இனி நீ போகலாம்.” என்றான் குளுரபின்.

ராங்தேன் படகை நோக்கிச் சென்றான். குளுரபின் பணத்துடன் வேறு திசையில் திரும்பினான்.

## டியூராண்டின் முடிவு

தமோவிபாஸ் கப்பல் புறப்பட்டுச சென்ற நாளைக்கு மறுநாள் டியூராண்டு கொர்ஸ்னியை நோக்கிப் புறப்பட்டது.

இத்தடவை குளூபின் கப்பலுக்குச் சரக்குகள் ஏற்று வதைக் கவனிக்கவேயில்லை. ஜீன் ஆபர்ஜில் அவண் இல்லாததால் சரக்குகள் ஏற்றப்படாமலே போயின.

கப்பலில் மீகாமனுக்கடுத்த தலைமைப் பணியாள் தங்க்ரூவில் என்பவன். அவன் கொர்ஸ்னியிலேயே பிறந்தவன். நல்ல உயர்குடியைச் சேர்ந்தவன். கப்பலின் முழுப்பொறுப்பும் அவனுடையதாதலால் கப்பலைவிட்டு அவன் வெளியே செல்வதேயில்லை. அவனுக்கென்று பிறரறியாத ஒரு தனியறை இருந்தது. முழுஓய்வு கிடைத்தபோது அவன் யாருமறியாமல் அங்கே சென்று தூங்குவான். குடி வகை கிடைத்தபோது அவ்விடத்திலேயே சிறிது குடியாறுதல் அவனுக்கு வழக்கம். ஆனால் இந்த ஒருகுற்றத்தை அவன் யாரும் அறியாமல் மறைத்துவைத்திருந்தான்.

கப்பல் புறப்படுமுன் தங்க்ரூவில் சிறிது ஓய்வு கொள்ளத் தன் அறை சென்றபோது, அங்கே ஒரு குடிவகைப் புட்டி இருந்தது கண்டான். அங்கே யார் வைத்திருப்பார்கள் என்று சிந்தித்தான். யார் வைத்தாலென்ன, ஒளித்து வைத்ததை ஒளித்தே குடிக்கலாம் என்று அவன் நினைத்தான்.

மறுநாள் கப்பலை அவன் சரியாக ஓட்டமுடியவில்லை. ஆனால் இது தெரியவிடாமல் அவன் பல்லைக் கடித்துக் கொண்டு ஓட்டினான்.

நாள்பட்ட தேர்ச்சியுடைய கப்பலோட்டிகள் எச்சரித்தனர், அன்று கடல் கொந்தளிப்பும் மூடுபனி மறைப்பும் உடையதாயிருக்குமென்று. ஆனால் மீகாமன் புறப்படவே துணிந்து கட்டளையிட்டான்.

பயணம் அமைதியாக, அமைதியான கடலிலேயே தொடங்கிற்று. கப்பல் பிரயாணிகளும் கப்பலோட்டி

களும் இன்பமாகப் பொழுதுபோக்கி உரையாடிக் கொண்டிருந்தனர்.

மூடுபனியைப்பற்றியும் கரையோரமுள்ள பலவகையான கொடும்பாறைகளைப்பற்றியும் கூட அவர்கள் காரசாரமாகப் பேசினர். மினிக்கியர்ப் பாறைகள், சூவாஸ், மங்க்டக், சூவஸ்டு ஆகிய பெயர்கள், ஒவ்வொன்றிலும் எத்தனை பாறைகள், அவற்றின் பண்புகள் எவை என்பனவெல்லாம் பேச்சில் அடிக்கடி விவாதிக்கப்பட்டன. கடலாராய்ச்சியில் கப்பல் அறிஞர்கள் முழ்கியிருந்தார்கள்.

திடீரென மீகாமன் முழங்கினான், தலைமைக்கப்பலோட்டியைப் பார்த்து. "அட குடிகாரா! கப்பலை எங்கே ஓட்டுகிறாய்?"

அந்த முழக்கம் கேட்டுக் கப்பல் கலகலத்தது.

தங்க்ரூவில் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு நின்றான்.

மீகாமன் கப்பலின் ஆணைச் சக்கரத்தைத் தானே மேற்கொண்டான். கப்பல் ஸெண்ட்-ஸாம்ப்ஸனை நோக்கிச் செல்வதற்கு மாறாக, ஜெர்ஸியைநோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அவன் அதை நேர்வழிக்கு மீண்டும் திருப்பினான்.

அச்சமயம் கடலகமெங்கும் புயலின் எச்சரிக்கை அமைதி வடிவில் படர்ந்தது. ஜெர்ஸி அருகில் செல்லும் கப்பல்கள் எந்தத் திசையில்சென்றாலும் ஜெர்ஸித் துறைமுகத்தின் பாதுகாப்பை நாடி ஓடின.

ஆனால் டியூராண்டு ஜெர்ஸிப் பக்கமிருந்து தலை திருப்பிச்சென்றது. முழுவேகத்துடன் கப்பல் இயந்திரங்கள் முடுக்கப்பட்டன. அந்தப் பழிகேடன் செய்துவிட்ட தாமதத்தைச் சரிக்கட்ட முனைந்தான் மீகாமன்.

கப்பலின் போக்கில் நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. ஆனால் நெருக்கடிக்கேற்ற அளவில் மீகாமன் செயல்வீறு உயர்ந்தது. மீகாமனின் அச் செயல்வீறுகண்டு எல்லாரும் வியந்து பாராட்டினர். அவன் இயந்திரத்தினுடன் ஒரு இயந்திரம்போல உழைத்தான். சிப்பந்திகள் ஒவ்

வொருவர் செயலையும் அவன் கவனித்து நின்று அவர்கள் நாடி நரம்பாய் இயங்கினான்.

கப்பல் விரைந்து சென்றது. கதிரவன் வான விளிம்பை முற்றிலும் அணுகவில்லை. ஆனால் வானகத்தில் எவருக்கும் தெரியாத ஒரு சிறு வெண்புள்ளி மீகாமன் கண்ணுக்குத் தெரிந்தது. அது விரைவில் பெரிதாயிற்று. மேல்திசை வானகத்தை அது மறைத்தது. பின் வான விளிம்பெங்கும் பரந்தது. நடுவே ஒரு இடைவெளியில் மட்டும்தான் கதிரவனொளி தெரிந்தது. மற்ற இடமெங்கும் மூடுபனித் திரையின் மூடாக்கு நிலைத்தது.

கப்பலோட்டிகளுக்கு மின்னல், இடி, புயல், காற்று எதையும் விட ஆபத்தானது இந்த மூடுபனிதான். அதில் சிக்காமல் மீகாமன் கப்பலை மீண்டும் திருப்பித் திருப்பிச் செலுத்தினான். ஆனால் இறுதியில் கப்பலிலேயே ஒருவரை ஒருவர் காணமுடியவில்லை. கீழே கடல் கொதித்தெழுந்தது. மேலே கார்முகில்கள், இடியும் மின்னலும்! நாற்புறமும் பனி மூடாக்கு! கப்பல் அவற்றினிடையே திசைதெரியாது விரைந்துசென்றது.

திசை தெரியவில்லை. திசைகாட்டி புயலின் மின்னாற்றலால் திசைகாட்டவில்லை. கடிகாரங்கள் நின்றன. நேரம் தெரியவில்லை. கப்பல் கண்ணைக் கட்டிக்கொண்டு இடர் நோக்கிச் சென்றது.

பிரயாணிகளிடையே கொர்ஸ்னியிலுள்ள ஒருவன் இருந்தான். அவன் கொர்ஸ்னிக் கடற்கரையையும் பாறைகளையும் நன்கறிந்தவன். அவன் மீகாமனிடம் வந்து 'மீகாமன் குளூபின்!' என்று விளித்தான்.

"என்ன செய்தி"

"ஹான்வேப் பாறையை நோக்கி நாம் செல்லுகிறோம் என்று எனக்குத் தோற்றுகிறது."

"நான் அப்படி நினைக்கவில்லை"

"எனக்குப் பாறை தெளிவாய்த் தெரிகிறது, கட்டாயம் கப்பல் செல்லும் திசையைச் சிறிது மாற்றக் கோருகிறேன்."

"எனக்குத் தெரியாதா ஹான்வே, அஞ்சவேண்......''

மீகாமன் வாசகத்தின் கடைசி ஒலி 'டாம்' என்று முடியுமுன் 'டாம்' என்ற ஓசை இடியோசை போலக் கேட்டது.

கப்பலின் அடித்தளம் பிளவுண்டது.

ஆனால் கப்பல் தாழவும் இல்லை. முன் செல்லவும் இல்லை. பாறை ஆப்பறைந்தது போல் கப்பலினுள் பதிந்து கொண்டது.

தண்ணீர் இலேசாகக் கப்பலினுள் வந்தது. ஆனால் பாறை கப்பலினுள் புகுந்து பதிந்திராவிட்டால் வேகம் இன்னும் மிகுதியாயிருக்கும்.

நீர் பாதிக் கப்பல் வரை வந்துவிட்டது. ஏவலாளர் உடல்களும் வெடவெடத்தன. ஆனால் மீகாமன் அமைதி பாறையின் அமைதியாயிருந்தது.

கப்பலில் ஒரு படகு இருந்தது. அதை இறக்கும்படி கட்டளையிடப்பட்டது. நீ முந்தி, நான் முந்தி யென அனைவரும் அதில் ஏறினர். கப்பல் உடைவதற்குக் காரணமாயிருந்த தங்க்ரூவில் ஏறத் தயங்கினன். மீகாமன் அவனையும் ஏறும்படி கட்டளையிட்டான்.

ஆனால் மீகாமன் படகில் வர மறுத்தான்.

படகில் பதின்மூன்று பேர் இருந்தனர். இன்னும் ஒருவர் வந்தால் அது கவிழ்ந்துவிடக்கூடும். அதனாலேயே மீகாமன் ஏறவில்லை என்று அவர்கள் எண்ணினர். ஆயினும் அவ் 'வீர மீகாமனை' விட்டுச்செல்ல அவர்கள் விரும்பவில்லை. அவனை விட்டுச் செல்வதை விட அவனுடன் இறப்பது மேல் என்று கருதினர். ஆகவே அவனை வற்புறுத்தினர்.

ஆனால் அவன் முடிவாக மறுத்துவிட்டான். 'கப்பலுக்கு நான பொறுப்பு: அது அமிழ்ந்தபின் நான் வாழமாட்டேன். அதனுடன் என் உயிர் முடியட்டும்' என்றான்.

தங்களுவில்லைத் தான் குற்றம் சாட்டவில்லை என்று கூறி அவர்களை மீகாமன் அனுப்பினான். கப்பலின் கணக்கு வழக்கு ஏடுகளையும் பத்திரங்களையும் படகில் கொண்டு செல்லும்படி ஒப்படைத்தான்.

கண்களில் நீர் ததும்பக் கதறியழுதவண்ணம் டியூராண்டையும் மீகாமன் குளூபினையும் விட்டுப் படகு சென்றது.

மீகாமன் பாறைமீது பாறையாக நின்று கப்பலின் கதியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

## இறுமாப்பும் ஏமாற்றமும்

பாறையில் அமர்ந்திருந்த மீகாமன் முகத்தில் வீரமும் தியாகமும் நிழற்படும் என்றுதான் கப்பலோட்டிகள் எண்ணியிருப்பர். ஆனால் அதில் மகிழ்ச்சி தாண்டவமாடிற்று. அமைதி நிலவிற்று. வெற்றி எககளிப்பு நடனமிட்டது!

ஒரு முதல்தர நடிப்பில் அவன் வெற்றி பெற்றிருந்தான். வாழ்க்கை முழுதும் அவன் நடித்த ஆஷாடபூதி நாடகத்தின் முத்தாய்ப்பு அந்நாள். அவன் தியாகி என்று பெயரெடுத்தான். வீரன் என்று பெயரெடுத்தான். மக்கள் உள்ளத்தில், டியூராண்டின் முதலாளி உள்ளத்தில், அழியா இடம் பெற்றான். நடிப்பு அவ்வளவு முதல்தரம். கப்பலின் பத்திரங்கள் முதற்கொண்டு அனுப்பிவிட்டான். ஆனால் அவன் சட்டைப் பையில், புகையிலைப் பெட்டியில், எழுபத்தையாயிரம் வெள்ளி இருந்தது. இதை எண்ணி அவன் சிரித்தான். அது ஒரு பேய்ச் சிரிப்பு!

பிளீன்மாண்டில் அவன் பயணப்பை இருந்தது. அது ஹான்வேயிலிருந்து ஒருகல் தொலேதான். முன்பே அவன் அத்தொலையை நீந்திக் கடந்திருக்கிறான். உலகில் அவன் இறந்ததாகக் கருதுவார்கள். பிளீன்மாண்டில் அவன் எத்தனை நாள் இருந்தாலும் உணவுண்டு. பேயாட்டத்துக்கு அஞ்சி யாரும் வரமாட்டார்கள். கள்ளவாணிகக்காரர் வந்து அவனை இட்டுச் செல்வர். பல தலைமுறைக்குப் போதிய பணம் பையிலிருக்கிறது. அவன் தன் வருங்கால வாழ்வின் வெற்றிக் கோட்டைகளை அச் செல்வத்தின் அடிப்படையில் கட்டினான். அதன்மீது அவன் மாய நடிப்புத் திறத்தின் வீரப் புகழ்க்கொடி பறந்தது!

அவன் எக்களித்தான். அது கூளிப்பேயின் எக்களிப்பு!

ஆனால் இத்தனை எக்களிப்பிடையேயும் சடுதியில் ஓர் ஏமாற்றம் அவனை நோக்கிச் சிரித்தது. மூடுபனி அகன்றது. வெயில் இன்னும் எறித்தது. தான் வந்து சேர்ந்திருந்த பாறை ஹான்வேப் பாறை அல்ல. கொடும் பாறைகளும் அஞ்சும் காலகூடப்பாறை டுவ்ரே! ஹான்வேயிலிருந்து ஒருகல் தொலைவை அவன் நீந்திவிடலாம். டுவ்ரேயிலிருந்து கரை இருபத்தைந்துகல்!

பிரரறியாமல் நீந்திச் செல்லும் எண்ணத்தில் மண் விழுந்தது. அதுமட்டுமல்ல. இப்பக்கம் கப்பல் வருவதே அரிது. அதற்குப் பலநாள் காத்திருக்கவேண்டி வரலாம். அதுவரையில் தங்குவது எப்படி—உணவுக்கு—குடிநீருக்கு என்ன செய்வது?

ஒரு துண்டு அப்பம், ஒரு துளி தண்ணீர் இல்லாத இடத்தில் எழுபத்தையாயிரம் வெள்ளி இருந்து என்ன பயன்?

அவன் உள்ளம் உடைந்தது. அவன் நடிப்புக் குலைந்தது.

நெடுநேரம் சிந்தித்தபின் எப்படியாவது பாறையின் உச்சி சென்று அப்பக்கம் கடந்து செல்லும் கப்பல்களைச் சைகை காட்டி அழைப்பது என்று முடிவு செய்தான்.

டுவ்சே இரண்டு வரிசையாக நீண்டு கிடந்தது. கப்பல் மூழ்கியது அதன் வெளி முனையிலேயே. இரண்டு வரிசைக்கும் இடையே இடுங்கிய கடற்கால் கிடந்தது. அதன் மறுகோடியில் இரு வரிசைகளையும்விடப் பலமடங்கு உயர்ந்த ஒரு பாறை இருந்தது. அதன் உச்சியில் முன் ஒரு மனிதன் உணவின்றிக் கிடந்து மாண்டு எலும்புக்கூடானன். அது முதல் அது மனிதப் பாறை எனப்பட்டது.

இந்த மனிதப் பாறைக்கு நீந்திச் செல்லும் எண்ணத்துடன் குளுபின் அமிழும் கப்பலிலிருந்து கடலில் குதித்தான்.

குதித்த வேகத்தில் அவன் கடலின் ஆழமற்ற அடித்தலம் வரை சென்றான். அதன்பின் அவன் நீர்ப்பரப்புக்கு வர இருந்தான்.

அதற்குள் யாரோ, எதுவோ, காலைப்பற்றி இழுத்தது. அவன் மீண்டும் கடலினுள் சென்றான்.

எழுபத்தையாயிரம் வெள்ளியை அரையில் சேர்த்த வண்ணம் அவன் கடலில் அமிழ்ந்து சென்றான்.

கடற்பரப்பில் அலைகள் பேய்ச்சிரிப்புச் சிரித்தன.

## காதல்வீரன் பெற்ற கட்டளை

"டியூராண்டு கடலில் உடைவுற்றது!"

இச்செய்தி ஊரில் பெருங் கிளர்ச்சி உண்டுபண்ணிற்று.

சிலர் இம்முடிவை விரும்பியிருந்தனர். அவர்கள் உள்ளூர மகிழ்ந்தனர். பெரும்பாலோர் வருந்தினர். ஆனால் லெத்தியரிக்கு அது இடியேறுயமைந்தது. அவன் வாழ்வின் ஆர்வம், நம்பிக்கை, உயிர்த்துடிப்பு யாவும் ஒரு நொடியிலகன்றது. அவன் தசைகள் தளர்ந்தன. உடல்

சோர்ந்தது. டெரூசெட் அனுதாபத்துடன் அவன் கையைப்பற்றி ஆறுதல் கூற முயன்றாள்.

ஆனால் முதல் இடியை அடுத்து வேறு செய்திகள் வந்தன. அவை துன்பம் போக்கவில்லை. ஆனால் மரத்துப் போன உணர்ச்சிகளைக் கிளறின.

கப்பலோட்டிகள் குரூபினின் வீர முடிவுபற்றி வானளாவப் புகழ்ந்தனர். பெருந்தன்மையுடன் கப்பலின் கணக்குக் குறிப்பேடுகளை அவன் தந்ததைக் குறிப்பிட்டனர். கப்பல் உடைந்தாலும் தாம் வரும்வரை மூழ்கவில்லை என்றும் கூறினர்.

அடுத்து, தங்க்ரூவில் கைது செய்யப்பட்டான் என்ற செய்தி வந்தது. ஆனால் லெத்தியரி அவன்மீது நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. அவன் விடுதலை பெற்றான்.

படகிலுள்ள கப்பலோட்டிகளைக் 'காஷ்மீர்' கரைக்குக் கொண்டுவந்தது. அதற்குச் சில மணி நேரங்களுக்குப் பின் டூவ்ரேப் பாறை வழியாக ஷீல்டீல் என்ற கப்பல் வந்தது. டியூராண்ட் அடுத்த கடலெழுச்சியால் பாறையிலிருந்து தூக்கி எறியப்பட்டு உடைந்ததென்றும், ஆனால் அதன் இயந்திரப் பகுதிகளும் நடுச்சட்டமும் உறுதியாயிருந்ததனால், உடையாமல் டூவ்ரே வரிசையின் இருபாறைகளிடையே அவை சிக்கிக்கொண்டிருந்ததைத் தான் பார்த்ததாகவும் அதன் மீகாமன் கூறினான்.

'இரவினுள் யாராவது சென்றால் இயந்திரத்தைப் பழுது படாமல் மீட்கலாம்' என்றும் அவன் சொன்னான்.

"யார் போவார்கள், இந்நேரத்தில்?" "போனாலும் ஒருவர் போய் என்ன பயன்? கப்பல் தச்சர்கள் பலர் அல்லவா வேண்டும்?" "இயந்திரம்தான் கப்பலில் விலையுள்ளது. அதை மீட்டால், கப்பலழிந்தாலும் அழியவில்லை என்றே கூறலாம்!"—இவ்வாறு கப்பலர் பலவாறு பேசினர்.

"டியூராண்டின் இயந்திரம் ஒரு இரவு முழுவதும் கெடாது இருக்கும் என்று நான் உறுதி கூறுவேன். ஆனால்

அதை மீட்டுக்கொண்டு வரத்தக்க வீரன் உலகில் இருக்க முடியாது" என்ருன், டியூரான்டின் ஒரு கப்பலோட்டி.

லெத்தியரி இப்போது முதல் முதலாக வாய் திறந்தான். "மீட்டுக்கொண்டு வரத்தக்க வீரன்மட்டும் இருக்கக்கூடுமாளுல்...

அவன் முடிப்பதற்குள், டெரூசெட் "அவனை நான் மணந்து கொள்வது உறுதி" என்ருன்

கில்லியட் அருகில் நின்றிருந்தான். "இது உறுதி தாளு, டெரூ!" என்ருன்.

அவள் வியப்புடன் 'ஆம்' என்று தலையசைத்தாள்.

லெத்தியரியின் கண்களில் ஒளி வீசிற்று. அவன் "அத்தகைய வீரனுக்குக் கட்டாயம் டெரூசெட் சொந்தமாவாள். கடவுளறிய இதை நான் உறுதி கூறுகிறேன்" என்ருன்.

அடுத்தகணம் கில்லியட் அங்கே இல்லை!

## எங்கும் கில்லியட் மயம்!

இரவில் முழுமதி வானில் ஒளி வீசிற்று. ஆயினும் கடலகத்தில் படகுகள் எதுவும் செல்லத் துணியவில்லை. டியூராண்டின் முடிவு அவ்வளவு அச்சம் ஊட்டியிருந்தது. அத்துடன் நண்பகலில் சேவல் கூவிற்று என்று செய்தியும் பரவிற்று. இது தீமையின் அறிகுறி என்று கெர்ன்ஸி மக்கள் எண்ணினர்.

ஆனல் ஒரே ஒரு படகு இந்த இரவிலும் துணிச்சலாக நடுக்கடலை நோக்கி விரைந்து சென்றது. கரையை நாடி விரைந்துவந்த மீன் படவர் அதைக்கண்டு வியந்தனர்.

கடற்கரையில் மீன்படவர் சேரிகள்தோறும் கடலில் அதன் பாய்கள் கண்டு பெண்டிர் மூக்கில் கை வைத்தனர். 'பேய்போல, கடலில் செல்வது அதுவும் நள்ளிரவில் செல்வது யார்?' என்று அவர்கள் மலைத்தனர்.

ஸெண்ட் பீட்டர்ஸ் நோக்கி விரைந்துகொண்டிருந்தது ஒரு கப்பல். தான் அஞ்சி ஒதுங்கும் இடத்தில், ஒரு சிறு பாய்க்கப்பல் துணிந்து முன்னேறுவது கண்டு கப்பலோட்டிகள் திணுக்குற்றனர்.

பாறைகளின் பின்ஒரு பாய்க்கப்பல் செல்வது கண்ட பல ஊர்ப்புற மக்கள் அது பாய் என்று உணரமாட்டாமல் கடலகத்தில் ஒரு கரும் பூதம் உலவுகிறது என்ற புரளியைக் கிளப்பினர்.

ஒரு காதலன் மன உறுதி கெர்ஸ்னிமக்கள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணிக் கற்பனை செய்யும்படி தூண்டிற்று. ஆனால் உண்மைச் செய்தி அவர்கள் கற்பனைகளை யெல்லாம் கடந்த ஒரு புதிர். தன்னந் தனியாக யார் உதவியுமின்றி, எவரும் தன் புகழில், வெற்றியில் பங்கு கொள்ள விடாமல், எவரும் தனக்கு முன் சென்றுவிடக் கூடாதே என்ற அவசரத்துடன் கில்லியட் டுவ்ரேயை நோக்கி, பாறைகளிடையே காலகாலன் என்று கருதப்படும் டுவ்ரேயை நோக்கி, விரைந்து சென்றான்.

அவன் உணவு கொள்ளவில்லை, நன்கு உடுத்தவில்லை. அவ்வளவு படபடப்புடன் விரைந்துசென்றாள், டெரூசெட்டைப் பெறுவதற்கான வீரச்செயல் செய்ய, தனி ஒருவனாய் டியூராஸ்ட் கப்பலின் இயந்திரத்தைத் தூக்கிக் கொண்டுவர!

வேலையின் கடுமை அவன் அறியாததல்ல. பல மனிதர் பல கருவிகள், சாதனங்களுடன் செய்வதற்குக்கூட அரிய செயல் அது என்று அவனுக்குத் தெரியும். ஆனால் அச் செயலுக்கான பரிசு டெரூசெட் என்ற எண்ணம் அவன் துணிச்சலுக்கு இறக்கை தந்தது. அவன் அப்பரிசு பெற,

கடலைப் பாயாகச் சுருட்டத் தயார்! வானத்தை வில்லாக வளைக்கத் தயார்!

கடலும் அலையும் அவன் கடந்து சென்றான். பாறையும் புயலும் அவனை அச்சுறுத்தவில்லை. டுவ்ரேயின் பாழ்ந் தடத்தைக் கண்ணும்வரை அவன் ஓயவில்லை. அச்சுறுத்தும் அப்பாறையில் சென்றுதான் அவன் அமைந்து சிந்திக்கத் தொடங்கினான்.

## திட்டமும் ஏற்பாடும்

தான் மேற்கொண்ட வேலையை வேறு எவரும் செய்ய முடியாது என்பதையோ, அதற்குத் தன்னைத் தூண்டிய பரிசு வேறு எவரையும் தூண்டியிருக்க முடியாது என்பதையோ, கில்லியட் அறியமாட்டான். அறிந்தால் டுவ்ரேயை அடைய அவசரப்பட்டிருக்கவேண்டியதில்லை, சுரை யோரமான நேர் குறுக்கு வழியில் வந்திருக்க வேண்டியது மில்லை. எவரும் தனக்கு முன்சென்று பரிசுக்குப் போட்டி யிடக்கூடாதே என்று கவலைப்பட்டிருக்க வேண்டியது மில்லை. அத்துடன் தன் அவசரத்தில் அவன் தன் பாரிய வேலைக்குரியகருவிகளையும் ஆய்ந்து எடுத்துக்கொள்ளவில்லை. கிட்டத்தட்ட வெறுங் கையுடனேயே வந்தான். நல்லகால மாக அவன் கப்பலில் எப்போதும் இருந்துவந்த சில ஆயு தங்கள் அவன் எடுக்காமலே அதில் கிடந்தன.

டுவ்ரேயின் இருவரிசையான பாறைகளில் வலப்புறப் பாறை பெரிது. இடப்புறம் சிறிது. அவற்றின் இடை வெளி ஒரு இருபது இருபத்தைந்தடி அகலமேயிருக்கும். டியூராண்ட் பொங்கிவரும் கடலில், புயலின் வேகத்தில் தொலைவிலிருந்து வானவெளியிலேயே தூக்கி எறியப் பட்டிருக்கவேண்டும். ஏனெனில் அது பாறை வரிசை

களின் உச்சியை அடுத்த இடைப் பள்ளத்தில் உத்தரம்போல மாட்டிக்கிடந்தது. ஷீல்டில் கப்பல் மீகாமன் கூறியபடியே இயந்திரம் ஒரு சிறிதும் உருக்குலையாமல் இருந்தது. ஆனால் கப்பலின் நடுச் சட்டம் தவிர மற்றப் பகுதிகள் நொறுங்கியும் முறிந்தும் கடலில் வீழ்ந்து போயிருந்தன. இயந்திரத்தின் புகைப்போக்கி அந்தரத்தில் நீண்டிருந்தது. துடுப்புக் கட்டைகள் சிறிது தாழ்ந்திருந்தாலும், பெருவாரி சேதமடையாமல் இருந்தன.

பல பாரக்கல் எடையுடைய இயந்திரத்தைக் கீழே எப்படி இறக்குவது? அச் சட்டத்திலிருந்து எப்படி பெயர்ப்பது? இவற்றைச் செய்யக் கருவிகள் வேண்டுமே! உளி, சுத்தி, ஆணிதிருகி, முடுக்கி, ஆணிகள், பணிமரங்கள் இரும்பு ஆகியவற்றுக்கு எங்கேபோவது? இவ்வளவும் செய்ய ஓராள் போதுமா? எத்தனை நாள் பிடிக்கும்? உணவுக்கு என்ன செய்வது, குடிதண்ணீருக்கு எங்கேபோவது? காற்றுக்கும் மழைக்கும் எங்கே ஒதுங்குவது? இரவு துயில்வது எங்கே? இவ்வண்ணம் எண்ணற்ற கேள்விகள் கில்லியட்டின் உள்ளத்தைத் துளைத்தன.

இத்தனை வேலையும் கூடிய விரைவில் ஆகவும் வேண்டும். கப்பலை ஆங்காரவேகத்தில் அன்று அழித்த கடலும் புயல் காற்றும், இயந்திரத்தை நீடித்து நின்று அழிக்க முடியும். அதன் பளுவே காற்றடிக்கும்போது அதை விழச்செய்து விடலாம். கடலில் விழுந்தால் அதை மீட்பது அரிது.

எப்படியும் வேலையில் இறங்கியாய்விட்டது. இனி இயந்திரத்தை மீட்க முடிந்தால், அதனுடன் ஊர்செல்ல வேண்டும். இல்லாவிட்டால் கடலுக்கும் புயலுக்கும் தன்னை ஒப்படைத்து விடுவது என்று அவன் துணிந்தான்.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்காலளவு என்பார்கள். சமுத்திரமும் அதனிலும் கொடிய புயலும் அவற்றிலும் கடுமைவாய்ந்த அப் பாறையும் அவன் துணிச்சல் கண்டு கறுவுவதுபோல் தோற்றிற்று,

அவனிடம் ஒரு கத்தியிருந்தது. கப்பலில் சில சுத்தி, ஒன்றிரண்டு ஆணிகள், முடிச்சிட்ட ஒரு ஏறுவடம் ஆகியவை இருந்தன. சில மாப்பண்டச் சில்லுகள் (பிஸ்கோத்துகள்) சிறிது தண்ணீர் இருந்தது. அவன் முதலில் உண்டு களையாறினான். பின் தங்கிடம் தேடினான்.

உயிரை வெறுத்து, அதேசமயம் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, அவன் நீந்தியும், வழுக்கலான பாறைகளில் நடந்தும், எங்கும் சுற்றிப் பார்வையிட்டான். தன் கப்பல் தங்குவதற்குரிய இடம் எது; கைப்பிடிக்கும் வேலைப்பாட்டுக் கும் உரிய பாறை விளிம்புகள் எங்கெங்கு உள்ளன; தங்க, இருந்து வேலைசெய்ய, உணவு, கருவிகளை வைத்துக் காக்கத்தக்க இடம் எங்கே என்று தேடினான்.

மனிதப்பாறையருகிலுள்ள சிறிய குடாவளைவில் அவன் தன் பாய்க்கப்பலைச் சேர்த்தான். வரிசைப் பாறைகளில் உள்ள சிறுகுகைகள் இரண்டில் ஒன்றைத் தன் கொல்லுலைக் கூடம் ஆக்கினான். மற்றொன்றினைச் சேம அறையாக்கினான். பெரிய டுவ்ரேயின் உச்சிக்குப் பெருமுயற்சியில் ஏறிப் பார்த்தான். அதனுச்சியில் பாறையின் முறிந்த பகுதிகளிடையே ஒரு ஆள் உடல் செல்லத்தக்க நீண்ட புழை கண்டு புதில் இரவு தங்கினான். இவ்விடத்தில் இதுவரை இருந்துவந்த பறவைகள் இரவில் நெடுநேரம்வரை அவனைச் சுற்றி வட்டமிட்டு அவனைத் துரத்தப்பார்த்தன. பின் தம் குடியிருப்பை மனிதனிடம் விட்டுவிட்டு அவை தம் குடியிருப்பை மனிதப் பாறைக்கு மாற்றின.

கடலில் வேலியிறங்கிய சமயம் பாறைகளுள் படிந்தும் அலைகளில் ஒதுங்கியும் கிடந்த கப்பலின் கட்டைகள், கயிறுகள், சங்கிலிகள், நங்கூரக் குண்டுகள் ஆகியவற்றை அவன் சேகரித்தான். இயந்திரச் சட்டத்தில் தன்பளு தாக்காதபடி மெல்ல ஏறிச்சென்று அதிலுள்ள பொருள்களை அகற்றி அதன்பளுவைக் குறைத்தான். அவன் சேர்த்த கட்டைகளே அவனுக்கு விறகாயின. இரும்புத் துண்டுகளே தீக்குச்சிகளாயின. கப்பலில் தொங்கிய கயிறுகளை முறுக்கி

வடங்களாக்கினான். கப்பல் சட்டத்தின் நடுப்பாலம் இரும்புக் கம்பியாலானது. அதைப் பிரித்தெடுத்து, அரமாகவும் ஆணிகளாகவும் சிறுகச் சிறுக மாற்றினான். பாறையில் சுழன்றடித்த காற்றை அவன் கொல்லுலைக் குகையில் நுழையாமல் மரத்தட்டிகளால் தடுத்து, சிறு புழைகள் வழியாக வரச்செய்து அதன்மூலமே ஊதுலை உண்டு பண்ணினான்.

ஒரு வார வேலைக்குப்பின் இயந்திரத்தை இறக்கும் திட்டம் ஒருவகையில் உருவாயிற்று. எதிரெதிராயிருந்த பாறைகளின் இடுக்கில் கட்டைத் துண்டுகளை வைத்து அடைத்து அதில் ஆணிகள் அடித்தான். இவற்றின் உதவியால் இயந்திரச் சட்டத்துக்கு மேலும் கீழும் பல குறுக்கு விட்டங்கள் பூட்டினான். அவற்றில் கப்பிகளிட்டு வடங்களின் மூலம் இயந்திரத்திலும் சட்டத்திலும் மாட்டினான். எல்லாக் கப்பிகளின் வடங்களையும் ஒரே ஒரு கயிற்றால் இழுக்கும்படி அமைத்ததுடன், தன் பளுவுக்கு மேற்படாத பளுவுடனே இயந்திரம் இயக்கப்படும்படி பல நிலையான கப்பிகளையும் இயங்கு கப்பிகளையும் இடையிட்டு வைத்தான்.

ஒருநாள் காலையில் உணவு இருக்குமிடத்தில் அவன் உணவைத் தேடினான். அதைக் கட்டோடு காணவில்லை. காற்று அதைக் கீழே தள்ளியிருந்தது. அதன் சிந்தல் சிதறல்களைப் பறவைகள் கொத்தித் தின்றுவிட்டன. தங்கிடத்தைத் தான் பறித்ததற்கு மாறாக, அவை அவன் உணவைப் பறித்தன.

அவன் இதுமுதல் சிப்பி, நண்டு, கடற்காளான் ஆகியவற்றையே தேடி உணவாகக்கொள்ளவேண்டியதாயிற்று. தண்ணீர், உணவை விடப்பெரிய பிரச்னை ஆயிற்று. கடல் நீரில் நனைந்து உடைகள் ஈரம் உலராதிருந்தன. ஈர உடைகளிடையே அதன் உப்பு விடாயைப் பெருக்கிற்று. அச்சமயம் அவன் பறவைகளை நினைத்துப் பார்த்தான். அவை செல்லுமிடமெல்லாம் கூர்ந்து கவனித்துப் பின்

பற்றினன். பாறையில் மழைநீர் தங்கிய இடத்தில் அவை நீர் குடித்தன. அவனும் அவற்றையே நாடிச் சென்று குடித்தான். இதற்குள் அவன் தாடி மீசை வளர்ந்து காட்டு மனிதன் போலத் தோன்றியதனல், பறவைகள் அவனைக் கண்டு அஞ்சாமல் பழக்கமாயின. அவனும் கடும் பசியிலும் அவற்றை உணவாக நாடாமல், அவற்றுடன் நேச உடப்படிக்கை செய்துகொண்டான்.

ஒருநாள் கடற்பாசி தேடிப் பாறைகளிடையே ஒரு குகையில் நெடுந்தொலை சென்றன். குகையின் கோடியிலுள்ள இடுக்கால் நீரின் கீழுள்ள ஒரு அழகிய குகைக் காட்சியைக் கண்டான். நீரின் கீழுள்ள ஒளிக்கதிர் பன்னிற வண்ணங்களாய்க் காட்சியளித்தன. குகையினுள் உட்குகை ஒன்று இருந்தது. அதில் ஏதோ என்று ஒரு மனிதஉருவம்போல் காட்சியளித்தது. தொலைப்பார்வைக்கு, குகை கோவிலாகவும் உருவம் அமைந்த உட்குகை அதன் மூலச் சிலையாகவும் தோன்றிற்று.

எல்லா வேலையும் முடிந்த பின் கில்லியட் தன் பாய்க் கப்பலைப் பாறைக்கிடையில் கொண்டுவந்து நிறுத்தினன். அவன் கப்பிகளின் மூலமும் வடங்கள் மூலமும் இயந்திரத்தை மெள்ளப்பாய்க் கப்பலின்மீது இறக்கினன். முன்பே இரண்டையும் அளந்திருந்ததனல், இயந்திரமும் சட்டமும் அதில் பொருந்தின. ஆனல் எதிர்பார்த்தபடி அவன் வெளியேவர முடியவில்லை. ஏனென்றல் அப்போது வேலியேற்றமாயிருந்ததால், டியூராண்டின் புகைப்போக்கி பாறையிலுள்ள மேலிட இடுக்கில் மாட்டிக்கொண்டது. தண்ணீர் மட்டம் தாழ்ந்த பின்பே அது இடுக்கிலிருந்து விடுபட்டு, அவன் வெளியேற முடியும். அதற்காக அவன் காத்திருந்தான்.

இரவில்தான் இனி கடல் தாழும். காலையில்தான் புறப்பட முடியும். அதுவரை ஓய்வு கொள்வதென்று அவன் பாய்க் கப்பலிலேயே படுத்து உறங்கினான்.

நள்ளிரவு இருக்கும். ஏதோ ஒன்று உடலை நெட்டித் தள்ளிற்று. எழுந்து பார்த்தான். கதிரவனொளியுமில்லை. நிலவொளி, விண்மீனொளியுமில்லை. ஆயினும் எங்கும் ஒரே நீலநிற ஒளி படர்ந்திருந்தது. அது கடல் நீரிலிருந்தே வந்ததென்று கண்டான். பட்டை பட்டையான ஒளிக் கீற்றுக்களும் அவற்றினிடையே நிழற்பிழம்புகளும் நீர்ப் பரப்பில் தளதளவென்று பிறங்கின. இது கனவா, நனவா என்ற ஐயத்துடன் கில்லியட் மீண்டும் மீண்டும் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தான். நனவுதான். ஆனால் அது ஒரு கோர நனவு என்பதை அவன் விரைவில் உணர்ந்தான்.

கடலின் இவ்வொளி அடுத்துவரும் பெரும் புயலுக்கு அறிகுறி என்று அவன் அறிவான்.

கடலின் ஆற்றல் பெரிது. ஆனால் காற்றின் ஆற்றல் அதனினும் பெரிது. இரண்டும் சந்திக்கும் பரப்பிலே மனிதன் மிதப்பது இந்நிலையை நெருக்கடி ஆக்கிற்று. ஆனால் கடல், காற்று இரண்டும் கரையை அடுத்தே முழு உயிர் பெறுகின்றன. கரை பாறையாயிருந்தால், டுவ்ரே போன்ற இடுக்கமான பாறையாயிருந்தால், நீரும் காற்றும் சேர்ந்த ஆற்றல் இன்னும் பன்மடங்காகப் பெருக்கம் அடையும். நேற்றுவரை இந்தப் புயல் வந்திருந்தால், இந்த ஆற்றலுக்கு டியூராண்டுதான் ஆளாயிருக்கும். அவன் பாறையின் குகைக்குள் பாதுகாப்பாக இருந்து தப்பிப் பிழைத்திருக்கலாம். பாய்க்கப்பல் மனிதப்பாறையின் பாதுகாப்பிலும் இருந்திருக்கும். ஆனால் அவன் இருபாறைகளின் இடுக்கில் பாய்க்கப்பலுடனும் டியூராண்டுடனும் அகப்

பட்ட இந்த ரோம் பார்த்து, அது தன்னை அழிக்கத் திட்டமிட்டிருக்கிறது என்று அவன் கண்டான்.

காற்றின் ஆற்றல் நீர்ப்பரப்பிலேயே பெருங் கொந்தளிப்பு உண்டுபண்ணும். நீர்ப் பரப்பிலும் எல்லா அலைகளும் குறுகிய பாறையிடுக்கில் நுழையும்போதுதான் நீர் பேயாட்டமாடும். அதற்குத் தப்பிப் பிழைக்க அந்நீர்ப்பரப்பில் அலைகளின் வேகத்தைத் தடுப்பது ஒன்றுதான் வழி என்று கில்லியட் கருதினான். நீரிடுக்கினுள் அலைகள் மூன்று திசைகளிலிருந்துதான் வரமுடியும். ஏனெனில் ஒரு திசையில் மனிதப் பாறை இருந்து அதை அடைத்துவிட்டது. அம்மூன்று வாயில்களுள், தெற்கிலுள்ள பாறையின் முன்வாயில் வழி ஒன்று. இதுவே தலைவாயில். மனிதப் பாறையருகில் கிழக்கிலும் மேற்கிலும் பாறை வரிசையில் இரண்டு இடை வெளிகள் இருந்தன. இவ்வாயில்கள் அலைகளுக்குமட்டும் அடைபட்டு, தண்ணீர் உள்ளே வர இடம் உண்டு பண்ணிவிட்டால், அலையின் வேகம் உள்ளே வராது. அதேசமயம் நீரின் வேகமும் குறையும். இதற்கான ஏற்பாடுகளில் அவன் முனைந்தான்.

டியூராண்டின் சட்டங்களிலுள்ள பலகைகளை நீண்ட வரிச்சல்களாசப் பிளந்து அவற்றால் அவன் அலைமோது சட்டங்கள் உருவாக்கினான். ஆணிகள் மூலம் அவற்றை இரு பாறைகளின் வாயிலும் நீர்ப்பரப்புக்குச் சற்று மேலும் கீழுமாகப் பொருத்தினான். இரண்டு சட்டங்களால் முன்வாயில் அடைப்பட்டது. அதன் பக்கமாக முழு இடர் பாதுகாப்பு ஏற்பட்டது. கிழக்கு வாயிலிலும் அதுபோல் இரண்டு சட்டங்கள் அடைத்தான். மேற்கு வாயிலிலும் அடைக்க முற்பட்டான்.

இரண்டாவது வாயிலின் சட்டம் முடிப்பதற்குள் வானம் முழங்கிவிட்டது. முகில் வானை மறைத்து விட்டது. அடிவான எல்லைக்கு அப்பாலிருந்து புயல் உறுமிக்கொண்டுவந்து கடலில் அமளி செய்து பாறையைச்

சுற்றி வட்டமிட்டது. அலைகள் மலைகளும் மலைக்கும் வண்ணம் எழுந்தலறிக்கொண்டு கடலிடுக்கில் திருவிளை யாடல் தொடங்கின. ஆனால் தெற்கு வாயிலின் சட்டத்தில் மோதி அலைகள் நொறுங்கின. ஆற்றலழிந்தது நீர் உள்ளே சென்றது. புயலும் அலையும் மீண்டும் மீண்டும் படையெடுத்தன. கில்லியட்டின் மரக்கோட்டை முன் காற்றின் சம்பம் சாயவில்லை. இரண்டு மூன்று நாழி கைக்குப பின் மீண்டும் அமைதி ஏற்பட்டது.

இவ்வமைதி திசைமாற்றத்துக்கான ஒரு ஓய்வு மட்டுமே என்று கில்லியட்டுக்குத் தெரியும். அடுத்த வீச்சு மேற்கிலிருந்து வந்தால் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது. கிழக்கில் வந்தால் ஒரு சட்டம் அதைத் தடுத்து நிற்கக்கூடும். கிழக்கிலேயே வரவிருந்தது என்று அவன் உய்த்துணர்ந்தான். ஆகவே தான் செய்து முடித்த இரண்டு சட்டங்களில் ஒன்றைக் கிழக்கிலே மாட்டி ஒன்றை மேற்கில் முதற்சட்டமாக அடைத்தான்.

கிழக்கே கடலின் படையெடுப்புத் தொடங்கிற்று. இங்கே சட்டங்களின் உறுதி குறைவு. பாறைகளும் முன்னுள்ளவைபோல உறுதியல்ல. ஆபினும் தெற்கும் மேற்கும் அடிக்கும் காற்றைவிட இங்கே காற்றுக் குறைவு. சட்டங்கள் அதைத் தாங்கிக்கொண்டன.

காற்று இறுதியில் மேற்கே அடிக்கத் தொடங்கிற்று. இவ்வாயிலில் சட்டம் ஒன்றுதான் இருந்தது. அது புயலின் தாக்குதலைத் தணித்தது. ஆனால் சட்டம் வளைந்து நெளிந்தது. புயலின் இடை ஓய்வில் கில்லியட் அவசர அவசரமாக தான் செய்த இரண்டாம் கட்டத்தை அண்டை கொடுத்தான். ஆனால் முதல் சட்டத்தைப் புயல் சிதைத்த பின் அதன் துண்டுகளே இரண்டாவது சட்டத்தைத் தகர்க்கும் உதைகுண்டுகளாயின. இரண்டாவது சட்டமும் தளர்ந்தது. எந்த நொடியிலும் புயலின் தாக்குதல் தன்னை அழிக்கலாம். தான் அரும்பாடுபட்டு இறக்கிய டியூராண்டை யும் அதைத் தாங்கிய பாய்க்கப்பலையும் மூழ்கடிக்கலாம்.

என்ற நிலை ஏற்பட்டது. தன் கப்பல் அழிவதானால், தான் அழிந்தபின் அழியட்டும் என்று அவன் தனக்குள் உறுதி செய்துகொண்டான். கடைசிப் பேரலை ஒன்று பாய்க் கப்பலைப் பாறைமீது மோதிற்று. கப்பல் பாறையில் நேரடியாக மோதியதாகத் தெரியவில்லை. அதன்மீதிருந்த டியூராண்டின் சட்டமே மோதுதலின் பெரும்பகுதியை ஏற்றது, அதன் புறப்பகுதிகள் அகப்பகுதியிலிருந்து பிளவுபட்டு, கப்பலுக்குப் பாரமாய்த் தொங்கின.

புயல் ஓய்ந்துவிட்டது. ஆனால் பாய்மரத்துக்கு எந்த நேரமும் இடர் நேரக்கூடும். இரண்டாகப் பிளந்த டியூராண்டின் பகுதி அதன் சமநிலையைக் கெடுத்தது. ஆகமே கில்லியட் அவசர அவசரமாகக் கைக்கோடரி எடுத்துப் பிளவுற்ற பகுதியை முழுதும் வெட்டிப் பிரித்தான். இதனால் தொங்கிக்கொண்டிருந்த பகுதிகள் கடலில் விழ்ந்தன. பாய்க்கப்பலின் பளுவும் குறைந்தது.

இப்போது வேலை முற்றிலும் முடிந்துவிட்டது. புறப்படவேண்டிய குறை ஒன்றுதான். ஆனால் காலையில் புறப்பட்டால்தான் கெர்ஸ்னிபில் பகலில் சென்றுசேர முடியும். ஆகவே அதற்கிடையே உணவுதேடி அவன் புறப்பட்டான். இங்கே ஏற்பட்ட தடை பயணத்தை இன்னும் ஒருநாள் சுணக்கிற்று. ஆனால் அது தடையாகமட்டுமில்லை. நற்பேறு ஆகவும் அமைந்தது.

## தீமையின் கருவில் நன்மை

உணவில்லாமல் நண்டும் சிப்பியும் காளானும் உண்டு கில்லியட் பழகிவிட்டான். ஆனால் இப்போது சமைக்கத் தக்க உணவு எதற்கும் வழியில்லை. ஏனெனில் அவன் கொல்லுலை முழுதும் நீர்மயமாய்ப்போயிற்று. இரண்டு நாளாகப் புயலில் நண்டும் சிப்பியும் கடல்பாறைகளை விட்

டகன்று சென்றுவிட்டன. அவற்றைத் தேடி அவன் பாறையிடுக்கில் நெடுந்தொலை சென்றான். ஓரிடத்தில் காலடியிலிருந்து நீருக்குள் ஒரு பெரிய நண்டு ஓடிற்று. அதை அவன் தொடர்ந்துவேட்டையாடினான். அது நீரடியிலுள்ள ஒரு குகையில் சென்றது. நீருள் மூழ்கி அவனும் பின்தொடர்ந்தான். உள்ளே குகை நீர்மட்டத்துக்கு மேலே உயர்ந்திருந்தது. அதைக்கண்டதும் அதுமுன் வேறு ஒரு குகையின் கோடியிலுள்ள விளிம்பின் மூலம் அவனுக்குக் காட்சியளித்த அதே குகையே என்பது தெரிந்தது. அதன் அழகு முன்பே அவனைக் கவர்ச்சிசெய்திருந்தது. இப்போது நேரிலேயே காண, அது கண்கொள்ளாக் காட்சியாகவே இருந்தது. சுற்றிலும் பாறையில் நீருக்கு வெளியே மங்கிய நீலநிறமும், நீருக்குள்ளாகப் பவளவண்ணமும் உடைய கொடிகள் ஒட்டிக்கொண்டிருந்தன. நீரின் அசைவால் அவை அடிக்கடி நிறமாற்றமடைந்தன. தளமட்டத்திலுள்ள கூழாங்கற்கள் உருண்டு திரண்டு பளபளப்பாய், குருதி நிறமாயிருந்தன. குகையினுள் குகையாயிருந்த பகுதியும் பெரிதாகவே இருந்தது. அதில் முன் பகுதியில் ஏதோ ஒன்று நண்டுப் புடைபோல் தென்பட்டது. தான் துரத்திவந்த நண்டு அதில்தான் பதுங்கியிருக்கக்கூடும் என்று அவன் எண்ணினான். பசியார்வத்தால் அதைப் பிடிக்க அவன் துடித்தான். கையை உட்குகை வழியாகச் செலுத்தி அதில் துழாவினான். துழாவியவுடன் கையில் ஏதோ கடித்ததுமாதிரி இருந்தது. நண்டுதான் கடித்தது என எண்ணி அதைப்பற்ற முனைந்தான். அதற்குள் பனி போன்ற குளிர்ச்சியும் மின்விளக்கு போன்ற மின்வெட்டும் பாம்புபோன்ற நெகிழ்ச்சியுமுடைய ஏதோ ஒன்று அவன் கையைச் சுற்றிக்கொண்டது. கையை எடுக்க நினைத்தான்; எடுக்க முடியவில்லை. அத்துடன் அதேபோன்ற பிற வடிவங்கள் மூன்று அவன்தோள்களையும் கால்களையும் சுற்றின. மறு கையையுஞ் ஒன்று சுற்றத்தொடங்கிற்று. கில்லியட் தலை சுழன்றது. அவன் கிட்டத் தட்டச் செயலற்றவனானான்.

குகையில் நுழையும்போது அவன் கத்தியை எடுத்து வாயில் கவ்விபிருந்தான். இப்போது அவன் வழங்கத் தகுந்த ஆயுதம் அது ஒன்றே. பிடிபடாத கையில் அதை எடுத்து ஓங்கினான்.

அவனைப் பிடித்த உருவம் சிலந்திபோன்ற ஒரு உருவம். உடல் சிலந்தி போலவே வெறும் தோலா யிருந்தது. தலையைச் சுற்றிப் பாம்பு போல ஐந்தடிவரை நீளமுள்ள எட்டு உடற்பகுதிகள் இருந்தன. இவை ஒவ் வொன்றிலும் இருபுறமும் ஊசிபோல் குருதியைக் குத்தி உறிஞ்சும் சிறு முட்கள் இருந்தன. இச்சிலந்தி மீன் சிலந்திபோல உடலைக் குடைவடிவில் சுருக்கிப் பதுங்கி யிருக்கும். இரைகளைக் கண்டால் மூன்று உடற் கூறு களால் பாறையைப் பற்றிக்கொண்டு மற்றக் கூறுகளால் இரையைச் சுற்றி இழுத்து உறிஞ்சும். குருதி முற்றும் உறிஞ்சியபின் இரை வெறும் சக்கையாக விழுந்துவிடும்.

கில்லியட் கத்தியை ஓங்கும்போது சிலந்திமீன் அவனைப் பாறையின் பக்கம் இழுக்கும் முயற்சியில் தலையை வெளியே சாய்த்தது. இது நல்லதாயிற்று. தலை தவிர மற்றப் பகுதிகள் வெறும் தோலாதலால், கத்தியாலும் வெட்டப்படக்கூடியவையல்ல ஆனால் தலை கத்தியால் துண்டிக்கப்பட்டது. உடற்பகுதிகள் செயலற்றுச் சோர்ந்து விழுந்தன. கில்லியட் தப்பினான்.

அழகிய கோயில் போல இருந்த அந்தக் குகை உண் மையில் இந்தப் பேய் மீன் வாழும் கோயில்தான் என்று அவன் இப்போது கண்டான்.

சிலந்தி மீன் அல்லது பேய் மீனால் குருதி உறிஞ்சப் பட்ட உயிரினங்களின் உடல்களும் உடற் கூறுகளும் எங்கும் கிடந்தன. ஆனால் நண்டுகள் அவற்றின் சதையை அரித்துத் தின்றுவிட்டன. அந் நண்டுகளையும் பேய் மீன் தின்றுவிடுவதால்தான் நண்டுகளையும் எளிதில் அங்கே காண முடியவில்லை. ஆனால் குகையின் உட்புறம் செல்லும்

தோறும் நண்டுகள் பதுங்கி அவ்விரைகளைத் தின்பது கண்டான்.

குகையின் அரை ஒளிக்கு அவன் கண்கள் இப்போது பழகிவிட்டன. அதனால் அவன் குகைக் கோடியில் தன்னை நோக்கிச் சிரிக்கும் ஒரு மனித உருவைக் கண்டான். அது உண்மையில் ஒரு முழு மனித எலும்புக் கூடு. அதன் சதைகள் முற்றிலும் அரித்துத் தின்னப்பட்டிருந்தன. அதைக் காண கில்லியட்டுக்கு அச்சமும் துயரும் மிகுந்தது. தானும் அம்மனிதன் நிலைக்கு மிகவும் அருகாமையிலேயே வந்திருந்ததை அவன் எண்ணித் திடுக்குற்றான். அவ்வுருவம் யார் என்று அறிய ஏதேனும் உடைகள் எச்சமிச்சம் இருக்கிறதா என்று பார்த்தான். எதுவும் காணவில்லை. ஆனால் அரையிலுள்ள தோல் கச்சை நீரிலூறிக் கெட்டிருந்தாலும், அரையைச் சுற்றி அப்படியே தொங்கிக் கிடந்தது. கத்தியால் அவன் அதை வெட்டி எடுத்தான். அதன் நடுவில் சதுரமான கெட்டிப் பொருள் ஏதோ இருந்தது. அது ஒரு இரும்புப் பெட்டி. துருவேறி அது திறக்க முடியாததாயிருந்தது, அவன் அதைப் பாறையில் மோதி உடைத்தான். உள்ளே இருந்து சில வெண்காசுகள் விழுந்தன. எழுபத்தையாயிரம் வெள்ளிகளுக்குச் சரியான மூன்று நோட்டுக்களும் இருந்தன. அதிலிருந்த ஒரு சிறு துண்டில் குளூபின் என்ற பெயரும் இருந்தது.

எலும்புக்கூடு குளூபினுடையதே என்றும் நீந்திப் பாறைக்கு வருமுன் பேய்மீனுக்கு அவன் இறையானான் என்றும் கில்லியட் அறிந்து கொண்டான்.

பேய்மீன் குகை அவனுக்குக் காலன் குகையாக முதலில் தோற்றிற்று. இப்போது காலத்தின் பரிசும் அவனுக்குக் கிட்டிற்று.

மறுநாள் அவன் காலையிலேயே பாய்க் கப்பலுடன் புறப்பட்டு கெர்ஸ்னி வந்தான்.

# கில்லியட்டின் தன் மறுப்புப் பண்பு

லெண்ட் ஸாம்ப்ஸனில் கில்லியட் சென்றபின் யாரும் அவன் பயணம்பற்றி எதுவும் நினைக்கவில்லை. அது ஒரு பித்தன் முயற்சி என்று கருதி அதை மறந்துவிட்டனர். லெத்தியரி எதிலும் பற்றின்றி அறையில் அடைபட்டுக் கிடந்தான். ஆனால் டெரூசெட் வாழ்வில் இப்போது புதிய மாறுதல் ஏற்பட்டிருந்தது. லெத்தியரிக்கு ஆறுதல் கூறப் பழய ஊர்ச்சட்ட முதல்வர் ஹொரடும் புதிய முதல்வர் காட்ரேயும் வந்திருந்தனர். ஹொரடு ஆறுதல் தரும் விவிலிய நூற்பகுதி ஒன்றை வாசித்தான். அதில் "ரெபெக்கா கண்களை உயர்த்தினாள். ஈசாக்கை அவள் கண்டாள்" என்ற பகுதியை ஹொரடு வாசிக்கும்போது டெரூசெட் கண்ணை உயர்த்தினாள். காட்ரே அவளைப் பார்த்தான். அவள் உள்ளத்தில் அவளை அறியாமல் அதுமுதல் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவளையும் அறியாமல் அது சமயப் பற்றாக வளர்ந்தது. அவள் வாரம் ஒருமுறைகூடக் கோயிலுக்குப் போகாதவள். வாரம் இருமுறை செல்லத் தொடங்கினாள். விவிலிய நூலில் அக்கரையற்றவள்: அது பற்றிய காட்ரே விளக்கவுரையை எழுத்துவிடாமல் கேட்டாள். வீட்டில் அதே பகுதியை மீண்டும் மீண்டும் படித்தாள்.

குளூபின் ராந்தேனிடமிருந்து பெற்ற பணத்தை லெத்தியரியிடம் கொடுக்கமாட்டாள் என்பது ராந்தேனுக்குத் தெரியும். ஆகவே லெத்தியரியிடம் குளூபின் பணம் பெற்ற செய்தியைக் கூறுவதே அவளிடம் பழி வாங்க வழி என்று அவள் எண்ணினாள். ஆகவே, தொலை சென்றதும் இது செய்தியை லெத்தியரிக்கு எழுதியிருந்தான். அதை வாசித்த லெத்தியரி மீண்டும் அடக்க முடியாத ஆத்திரமும் கோபமும் கொண்டான். இதனால் அவன் உறங்க முடியவில்லை. பலகணி வழியாகக் கடற்காற்று வாங்கியவண்ணம் துறைமுகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவன் கண்களில் அவன் உயிரினும்

அரிய டியூராண்டின் புகைப்போக்கி தெரிந்தது. அவன் ஓடிச்சென்று பார்த்தான். இயந்திரமும் கப்பற் சட்டமும் அப்படியே இருந்தன. இதனை இங்கே கொண்டுவந்த அராபிக்கதைப் பூதம் எதுவோ என்று திகைத்தாள்.

அது பூதமாயிராமல் மனிதனுயிருந்தால், கில்லியட்டே யாகவேண்டும் என்று கருதி, அவனை அழைக்கத் துறை முகத்தின் மணியை அவசர அவசரமாக அடித்தான்.

கில்லிபட் இதேசமயம் உள்ளத்தை முழுதும் டெரூ செட்டின்பால் ஓடவிட்டுக்கொண்டு தோட்டத்தில் இருந் தான். வேலியின் மறுபுறம் எதிர்பாராவகையில் டெரூ செட்டும் வந்தாள். இருவரும் எதிர்பாராவகையில் காட் ரேவும் அங்கே வந்தான். அவன் உறவினர் ஒருவர் இருந்து அவனுக்குத் திடுமெனப் பெருஞ்செல்வம் உரியதாயிற்று. மறுநாளே அவன் காஷ்மீரில் பயணமாகச் செல்லவேண்டும். இதைக்கூறி டெருசெட்டிடம் விடை பெறவே அவன் எண்ணினுன்.

ஆனல் இறுதி விடைபெறும் சமயமாதலால் தன் உள்ளக் காதலே அவன் அவளிடம் கொட்டினுன். அவளும் தன் உள்ளம் அவனிடமே ஈடுபட்டிருப்பதை அப்போது தான் உணர்ந்தாள். காதலிருவரும் ஒருவருடன் ஒருவர் மாறு உறுதி கூறிக் காதலில் இணைந்தனர். லெத்தியரி மணியடித்ததைக்கூட அவர்கள் கவனிக்கவில்லை.

கில்லியட்டின் உள்ளம் உடைவுற்றது. அவன் காதல் தெய்வம் அவனை அசட்டைசெய்து வேறிடத்தில் உள்ளம் பறிகொடுத்தது. அவள் அவன்மீது சினம் கொள்ளவில்லை. அவன் வாழ்வின் ஆர்வம் முழுதும், அவன் தியாகம் முழு வதும் கசப்பாக மாறிற்று. ஆயினும் கசப்பிலும் காதல் அவள் உள்ளப்பண்பை உயர்த்திற்று. அவன் காதலர் நலனில் அக்கரை கொண்டு வெளியேறினுன்.

லெத்தியரி கில்லியட்டை ஆரத் தழுவிக்கொண்டான். செய்தி யாவும் கேட்டான். குளூபினின் மாயமுடிவுபற்றிய கதை கேட்டபின் அவன் மகிழ்ச்சி கரைகடந்தது. அந்

நிலையில் அவன் "ஆகா, நான் விரும்பிக் காத்துக்கிடந்த என் மருமகள் நீயே. டெரூசெட் இனி உன் மனைவி. புதிய டியூராண்டுக்கும் நீயே மிகாமன்" என்றான்.

அவன் பயணக் கோலத்திலிருந்தான். ஆடை மாற்ற வில்லை. அதையும் பாராமல் அவன் டெரூசெட்டை அழைத்து அவளிடம் "இதோ உன் கணவன். நாளை உன் திருமணத்திற்குத் தயாராயிரு" என்று ஆணையிட்டான்.

காட்சே அருகிலேயே நின்றான்.

காதலர் உள்ளத் துடிப்பை லெத்தியரி அறியவில்லை. ஆனால் கில்லியட் அறிந்தான். தன் காதல் தெய்வம் தனக்குரியதாகாவிட்டாலும் அதன் வாழ்வு பாழாக அவன் பார்க்க முடியவில்லை.

லெத்தியரி மணவினைக்கான ஏற்பாடுகள் செய்யும்படி கில்லியட்டிடம் கூறினான்.

கில்லியட் ஏற்பாடுகள் செய்தான். ஆனால் மணமகன் பெயரைக் கில்லியட் என்று பதிவு செய்யவில்லை. காட்சே என்று பதிவு செய்தான். அத்துடன் காட்சே மறுநாளே வெளிநாடு செல்வதால், உடனே திருமணத்துக்குத் தனி இணக்கமும் பெற்றான்.

கப்பலில் ஏறுமுன் காட்சேயுடன் டெரூசெட் கடற் கரை சென்றாள். அவள் தானும் தந்தையில்லம் விட்டு வருவதாகப் பிடிமுரண்டு செய்தாள். அவன் அவளைவிட்டுச் செல்வது தவிர வழிகாணாது திகைத்தான். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த கில்லியட் முன்வந்து, அவர்களைத் தானே மணம்செய்து அனுப்புவதாகக் கூறினான். காதல ருக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அவர்கள் தம் நெருக்கடி நிலையில் அதை ஏற்றனர். திருமணம் உடனே கோயிலில் நிறைவேறிற்று." லெத்தியரி உடல்கலமின்மையால் வர முடியவில்லை. எனவே கில்லியட் அவருக்குப் பதிலாகவே தான் வந்திருக்கிறேன்" என்று கூறி அவன் கையெழுத் தைத்தானே இட்டு அதற்கான அத்தாட்சிக் கடிதமும் கொடுத்தான்.

கில்லியட் தாய் அவனுக்கு வரவிருக்கும் மனைவிக்காகக் கொடுத்த பரிசுகளடங்கிய பெட்டியை அவன் மணமக்களுக்குப் பரிசாகக் கொடுத்தான். இது உன் மனைவிக்கல்லவா கொடுக்கவேண்டும் என்றாள். டெரூசெட் "நான் இனி மணம் செய்யப்போவதில்லை" என்றான் அவன்.

காதலர் அவனுக்காக வருந்தினர். டெரூசெட் தான் பனியில் அவன் பெயர் எழுதி அவனை நையாண்டி செய்த குறும்பையும், டியூரான்டைத் தேட அனுப்பிய ஆவசா ஆர்வ உரையையும் நினைத்து வருந்தினள். காட்ரே, தன்னை கில்டாமரிலிருந்து காத்தவன் வாழ்வைத் தன் கையால் அழிக்க நேர்ந்ததே என்று வருந்தினாள்.

காஷ்மீர் கப்பலில் காதலர் கைகோத்துக்கொண்டிருந்தனர். கப்பல் கில்டால்மர் கடந்துசென்றது. கில்டால்மர் மீது கடல் பொங்கி வந்துகொண்டிருந்தது. அதில் தான் இருந்த இடத்தில் மற்றொருவன் இருப்பதையும், அவன் நெஞ்சுக்கு மேல் தண்ணீர் ஏறிவிட்டதையும் கண்டு காட்ரேன் "ஆ" என்றான்.

டெரூசெட்டும் அவ்வுருவை நோக்கினாள். "ஆ, கில்லியட்" என்றான். கவலையற்ற அவன் உள்ளத்தில்கூட அவன் தியாகமும் பெருந்தன்மையும் ஆழ்ந்து பதிந்தன. இரண்டு கண்ணீர்த்துளிகள் அவள் கண்களிலிருந்து காட்ரே தோள்களில் விழுந்தன.

'ஒரு கடல்மறவன் பெற்ற கன்னி நான். மற்றொரு உடல் மறவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட கன்னியானேன்' என்று அவள் வெருமூச்சுவிட்டாள்.

கடல் மறவர் மரபுக்குத் தன் காதல் ஒரு களங்கமாயிற்று என்று காட்ரே எண்ணினான். அவ் வெண்ணம் அவன் கையினூடாகச் சென்று டெரூசெட்டின் கைகளை அழுத்திற்று.

# நூலாசிரியர்

விக்டர் ஹ்யூகோ பிரஞ்சு இலக்கியப் பூங்காவினிடையே ஒரு செய்குன்றில் அமைந்த ஒருசிறு செயற்கைக் காடு. அவ் விலக்கியத்தின் தென்றலிடையே அது ஒரு சிறு புயலாகச் சுழித்துச் செல்கிறது.

அவர் பிரஞ்சு இலக்கியப் புனைவியல் இயக்கத்தின் முதல்வரும் தலைவரும் ஆவர். கவிதை, புனைகதை ஆகிய இருதுறைகளில் அவர் முதல் வரிசையில் இடம்பெற்றவர். ஆனால் புனைகதையிலும் கூட அவர் கவிதைப் பண்பே தலை தூக்கி நிற்கிறது. அத்துடன் காவிய முறையில் சோர்வு தட்டாத வகையில் பத்து நூறுக் கணக்கான பக்கங்கள் வர்ணனைகளால் நிரப்புவதில் அவர் தனித்திறம் உடையவர். கவிதையில் அவர் சந்தங்கள் பலவற்றில் திளைத்தது போலவே, உரை நடையில் இயற்கையின் பின்னணிக்கு உயிர் தருவதில் அவர் சிறப்புடையவர்.

விக்டர் ஹியூகோ 1802-ல் பிறந்து 1885 வரை வாழ்ந்தார். அவர் தந்தை ஒரு படைத் தலைவர். 14 வயதிலிருந்தே அவர் கவிதையும் கதையும் நாடகங்களும் எழுதத் தொடங்கினார் நோத்ரெதாம், லாமிசராப்லே (ஏழை படும்பாடு) லாதிரவாயே தேலாமெர் (கடல் மறவர்) கத்ர்விங்த் த்ரெஸ் (இருபது ஆண்டுகளுக்குப் பின்) ஆகியவைகள் அவர் சிறந்த புனைகதைகள்.

அவர் வாழ்வில் பலதடவை அரசியல் கட்சி மாறியவர். 1830 வரை மன்னர் கட்சியிலிருந்து 1848-ல் நெப்போலியனின் ஆதரவாளராக மாறினார். 1852-லிருந்து பல ஆண்டுகள் அவர் சொர்ஸ்னித் தீவில் தங்கினார். சிலகாலம் பெல்ஜியம் சென்று அங்கும் மன்னருடன் முரணி வெளியேற்றப்பட்டார்.



உலக இலக்கியச் செல்வங்களைத் தமிழில் வழங்குவதற்காகவே- "விருந்து" மாதம் ஒரு புத்தக மாக வெளிவருகிறது.....

**8 அணா.**

வெளியிடுவோர்
பொன்னி லிமிடெட்
சென்னை-21.

PANDIAN